# நம் வழி வேளாண்மை

பருவம் 16 | ஜூலை – செப்டம்பர் 2007 | இதழ் 3




*இயற்கை வழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள்*
*மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை*

# நம்வழி வேளாண்மை

பருவம் 16 ஜூலை – செப்டம்பர் 2007 இதழ் 2

ஆசிரியர்
**பெ. விவேகானந்தன்**

### நம் வழி வேளாண்மை தத்துவம்

தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் அள்ளி சேகரிக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் உய்ய வழி வகுக்கின்றது.

**நம்வழி வேளாண்மை குழுமம்**
**பிற மொழி இதழ்கள்**

| | |
|---|---|
| ஆங்கிலம் | – தேனீ (Honey Bee) |
| குஜராத்தி | – லோக் சர்வானி |
| ஹிந்தி | – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி |
| ஒரியா | – அமா அகாபகா |
| தெலுங்கு | – பல்லி ஸ்ருஜானா |
| கன்னடம் | – ஹித்தலகிடா |
| மலையாளம் | – இனிகர்ஷகான் சம்சாரிகட்டே |

நம் வழி வேளாண்மை
45, டி.பி.எம். நகர்,
விராட்டிபத்து, மதுரை – 625 016.
(போன்) 0452– 2380082, 2380943.
இமெயில் vivekseva@gmail.com

**ஆங்கில இதழ் முகவரி**

Prof. Anil Gupta, Honey Bee,
Indian Institute of Management,
Vastrapur, Ahmedabad -380 015
email: honeybee@sristi.org
www.nifindia.org ; www.sristi.org

## மாட்டுக்கும் வேண்டும் ஓய்வு நாள்

நாம் வாரத்தில் ஞாயிறு விடுமுறை எடுத்துக் கொள்கிறோம். இது மேற்கத்திய நாகரீகம். இந்த முறையை நாம் கடைபிடித்து பழகி விட்டோம். தமிழ்நாட்டில் நெசவாளர்கள் அமாவாசை அன்று நெய்ய மாட்டார்கள். அன்று பணிக்கு விடுமுறை . அன்று ஒரு நேரமே சாப்பிட்டு விரதமும் இருப்பார்கள். உடலுறுப்புகளுக்கும் விடுமுறை.

தமிழ்நாட்டில் லிங்காயித் சமூகத்தைச் சார்ந்தவர்கள் திங்கள் கிழமை மாட்டை வேலைக்கு ஓட்டிபோக மாட்டார்கள். விதைக்கும் காலத்திலும் திங்கள் கிழமை ஏர்பூட்ட மாட்டார்கள். திங்கள் கிழமை மாட்டுக்கு பிறந்ததினம். அதாவது கோகுலகாரனின் தினம் என்று மதித்து ஓய்வு கொடுப்பர். அன்று பசுமாட்டில் பால் கறப்பது கிடையாது. அன்று கன்றுக்கு பால் குடிக்க அடிப்படியே விட்டு விடுவர். தாய் தன் குட்டிக்கு முழுப்பாலை சொறிந்து சந்தோஷப்படும் நாள். இந்த கலாச்சாரம் இன்றும் ஈரோடு மாவட்டம் பர்கூர் பகுதி கிராமங்களில் காணப்படுகின்றன. அதே போல் காளைக்கு மருந்து கொடுக்கும் நாளில் பசுவை தாண்டவிட மாட்டார்கள்.

சில அடங்காத பசு மாடுகளுக்கு கயிறுகட்டி பால்பீச்சுவர். ஆனால் கயிறுகட்டி பீச்சப்பட்ட பாலை இறைவனுக்கு நிவேதனம் கொடுக்கமாட்டார்கள்.

ஒவ்வொரு பட்டியிலும் விடப்படும் கோயில்மாட்டை இறக்கும் வரை வைத்திருந்து புதைப்பர். அல்லது மாதேஸ்வரன் கோயிலுக்கு சென்று விட்டு விடுவர். எல்லா உயிர்களையும் நாம் சந்தோஷமாக பராமரித்தால் இயற்கை அன்னை குளிர்வாள், பூரிப்பாள், செழிப்பை கொடுப்பாள். வாழ்க நம் கலாச்சாரம். தைத்திரு நாளில் நாமும் இதனை கடைபிடிப்போம்.

## உலக உணவு உரிமை தினம் உணக்கான உரிமை மதுரை மாநாட்டின் பிரகடனம்

உலக உணவு தினத்தன்று (அக்டோபர் 16,17 2007 ) மதுரையிலேயே பல்வேறு அமைப்புகளைச் , சார்ந்த தலித் மக்கள், பழங்குடி மக்கள், ஒருங்கிணைக்கப்படாத மக்கள், கடற்கரையைச் சார்ந்த மீனவ மக்கள் பலரும் கூடிய அமர்ந்து எடுத்து முடிவுகளின் அடிப்படையில் மதுரை பிரகடனத்தை வெளியிட்டனர். இந்த கருத்தரங்கை பியான்

தமிழ்நாடு , ஆக்சன் எய்டு மற்றும் பல பங்களிப்பு நிறுவனங்களும் சேர்ந்து ஏற்பாடு செய்திருந்தது. இந்த பிரகடனம் பின்வருமாறு.

1. அனுபவ் , மேக்ஸ்வெர்த் , ஸ்டெர்லைட் புற்றீசல் போன்று தோன்றி மறைந்த தனியார் கம்பெனிகளால் ஆக்கிரமிக்கப்பட்டு தற்சமயம் சென்னை உயர்நீதி மன்றத்தால் ஏலத்தில் விடப்படுகின்ற நிலங்களை தமிழக அரசே கையகப்படுத்தி அவற்றை ஏழை விவசாயிகளுக்கு ஏற்கனவே அறிவித்துள்ளபடி ஒவ்வொருவருக்கும் 2 ஏக்கர் வீதம் பங்கிட்டுத் தர வழிவகை செய்ய வேண்டும்.

2. ஒரு போக சாகுபடி நிலங்கள் மற்றும் மானாவாரி நிலங்களில் தொழிற்பூங்காக்கள், நவீன குடியிருப்புக்கள், பன்னாட்டு தொழிற்சாலைகள், சிறப்பு பொருளாதார மண்டலங்கள் அமைப்பதைக் கைவிட வேண்டும்.

3. தண்ணீரை தனியார் மயமாக்கி வியாபாரமாக்கும் பெப்சி, கோகோகோலா போன்ற பன்னாட்டு கம்பெனிகளுக்கு முழுவதும் தடைவிதிக்க வேண்டும்.

4. நில உச்சசவரம்பு சட்டம், வள ஆதாரங்கள் மீது உள்ளாட்சி அமைப்புகள் அதிகாரம் வழங்கும் அரசியல் நிர்ணய சட்டத்தின் 73 வது சட்டதிருத்தத்தைக் கேலி கூத்தாக்கும் சிறப்பு பொருளாதார மண்டலங்களை அறவே கைவிட வேண்டும்.

5. சிறுவணிகத்திலும், காய்கறி வணிகத்திலும் பன்னாட்டு உள்நாட்டு பெருங்கம்பெனிகள் புகுவதை நிரந்தரமாக தடை செய்ய வேண்டும்.

6. பன்னாட்டு கம்பெனிகளின் மரபு மாற்றம் செய்யப்பட்ட மலட்டு விதைகளின் ஆராய்ச்சிக்கும், பயன்பாட்டிற்கும், வியாபாரத்திற்கும் நிரந்தரத் தடைவிதிக்க வேண்டும்.

7.சலுகைகளைக் காட்டி நீர் , நிலம், விதைகள் மீதான மக்கள் உரிமைகளைத் தட்டிப் பறிக்கும் போக்கை தமிழக அரசு கைவிட வேண்டும்.

8. உள்நாட்டு உணவுத் தேவையை உறுதி செய்ய உள்நாட்டு நீர் ஆதாரங்களைப் பாதுகாக்க மற்றும் மேம்படுத்த உள்ளூர் தொழிலாளர்களின் நலன்காக்க , உள்ளூர் விதைகளைப் பாதுகாத்து மேம்படுத்த , இந்த தேசத்தின் வேளாண் கலாச்சாரத்தைப் பாதுகாக்க அந்தந்தப் பகுதியின் சூழலுக்கேற்ப "வேளாண் மக்கள் பொருளாதார மண்டலங்களை" உருவாக்க வேண்டும்.

9. நிலங்களின் மீது மக்களுக்கு உரிமை இல்லாமல் இருக்கின்ற நிலையையும் , ஆக்கிரமிப்புகளை வெளியேற்ற வேண்டும் என்ற கருத்தோடு சட்ட ரீதியாக கொள்கை ரீதியில் நில உச்ச உரம்பு சட்டம் முழுவதுமாக அமுல்படுத்த வேண்டும்.

10. பஞ்சாயத்துக்கள் கிராம சபைகளின் அதிகாரத்தைப் பயன்படுத்தி இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த பல்வேறு கம்பெனிகள் தனியார் மயத்தைப் பரப்ப முழுவதுமாக தடை செய்ய வேண்டும்.

11. காடுகள் மீதும், மேய்ச்சல் நிலங்களின் மீதும் நமக்கு இருக்கின்ற உரிமைகள் பறி போவதைத் தடுக்க வன உரிமை சட்டம் 2007 ல் மாடு மேய்ப்போருக்கும் , ஆதிவாசி மக்களுக்கும், மலையை நம்பி வாழ்பவருக்கும் வழங்கப்பட்டிருக்கும் உரிமை இன்னமும் செயல்பாட்டிற்கு வராமல் இருக்கின்ற காரணத்தினால் சில மாதங்களுக்குள் இந்த சட்டத்தை தமிழில் பொழி பெயர்த்து எல்லோரும் அறியச்செய்து இந்த சட்டம் அமுலாக்க வழிவகை செய்ய வேண்டும்.

12. கால்நடை வளர்ப்பில் பல்வேறு பிரச்சினைகளை சந்தித்து வருகின்ற குறிப்பாக பெண்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையிலே கால்நடை இனப்பெருக்கக் கொள்கையில் நாட்டு இனங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் எளிய கால்நடை மூலிகை வைத்திய முறைகளை பயிற்சி மூலம் மக்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். என்ற கோரிக்கையையும் , மேய்ச்சல் நிலத்தில் காட்டாமணக்கு நடுதல் அல்லது ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் போன்றவற்றை கொள்கை ரீதியாக எடுத்து கையாளுவது என்ற முடிவுக்கு வந்துள்ளோம்.

13. தேசிய கிராம வேலைவாய்ப்பு உத்திரவாத திட்டம் (NRGES) பொருத்தவரையிலே தொழில்களிலே ஈடுபடுகின்ற மக்கள் நாளொன்றுக்கு குடிப்பதற்கு 4 லிட்டராவது தண்ணீர் கிடைக்க வேண்டும் என்பதும், அவர்கள் உடம்பிலே தண்ணீர் சக்தி இல்லாமல் போவதற்கு தண்ணீர் அவசியம் என்ற காரணத்தினால் இந்த குறைந்தபட்சம் 4 லிட்டர் தண்ணீர் வேலை செய்யும் இடத்திலே வழங்கப்பட வேண்டும் என்று கோருகிறோம்.

14. ஐந்து குழுந்தைகளுக்கு மேல் இருந்தால் கண்டிப்பாக குழுந்தைகள் பல்வேறு இடங்களிலே அது நிலைப்படுத்தப்படாமல் இருக்கின்ற காரணத்தினாயே

எல்லா இடங்களிலும் குழந்தைகள் பாதுகாப்பு நிலையங்கள் பெண்களுக்காக ஏற்படுத்தித் தர கோருகிறோம்.

15. கொடுக்கப்படுகின்ற கூலியிலே நாளொன்றுக்கு 80 ரூ. கிடைப்பது என்பது பல்வேறு காரணங்களினால் மாற்றப்பட்டு செயல்படுத்தப்படுகின்ற காரணங்களினால் நில அளவை முறையிலே கூலி தருவது என்பதை குறைத்துக் கொண்டு சரியான வகையிலே வெளிப்படையாக இந்த மக்களுக்கு கூலி கிடைக்கின்ற வாய்ப்பினை ஏற்படுத்தித்தர கோருகிறோம். ஊனமுற்றோருக்கும், வயதானவருக்கும் போதுமான அளவிலே வேலை வாய்ப்புகளும் பொருத்தமான வேலைவாய்ப்புகளும் கிடைக்கச் செய்ய வேண்டும்.

16. தேவை அடிப்படையிலே நடை பெறுகின்ற பல்வேறு திட்டங்களை மாற்றிப் பகுதிக்கு பொருத்தமான சூழலுக்கேற்ற திட்டங்களை என்.ஆர்.டி.எ. மூலமாக நடத்த வேண்டுமென்று கோருகிறோம்.

17. எல்லா கணக்கு வழக்குகளும் வெளிப்படையாக வைக்கப்பட்டு சமூக கண்காணிப்பின் கீழ் செயல்படுத்தப்பட வேண்டும்.

18. குறைந்த பட்ச கூலிச்சட்டம் பொருத்தமாக அமுல்படுத்தப்பட்டு அதன் கருத்துக் கேற்ப செயல்படுத்தப்பட வேண்டும்.

19. இந்திய தொழில் மகாநாடு 1957 ல் கொண்டு வந்தபடி உழைப்பவர்களுக்குப் பொருத்தமான சம்பளக் கொள்கைகளை உருவாக்க வேண்டும். என்று கோருகிறோம்.

20. கடற்கரைப் பகுதியிலே பாரம்பரிய மக்களின் உரிமைகளை கடலிலும், கரையிலும் உறுதி செய்யும் அளவிலே ஒரு புதிய முழுமையான சட்டம் கொண்டு வர வேண்டும். அப்படி ஒரு சட்டம் வருகின்ற காலம் வரை தற்போது நடைமுறையில் இருக்கும் அறிவிப்பு ஆணையை 1991 ல் இருந்த நிலைக்கு மாற்றியமைக்கப்பட வேண்டும்.

21. சாமிநாதன் கமிட்டி அடிப்படையில் அமைந்த எந்த புதிய திட்டமும் கொண்டு வரப்படாத அளவிலே கமிட்டியின் அறிக்கை முழுவதும் கைவிடச் செய்வோம்.

22. அனைத்து ஏழை மக்களுக்கும் இலவசமாக நிரந்தர வீட்டுமனைப் பட்டாக்கள் ஆண்கள் , பெண்கள் இருவருடைய கூட்டுப் பெயரிலும் வழங்கப்பட வேண்டும்.

23. ஊராட்சி சீரமைப்பு அடிப்படையிலே கடற்கரை கிராமங்களில் 500 பேருக்கு மேல் இருக்கக் கூடிய அனைத்து கிராமங்கள் தனி ஊராட்சியாக அமைவதற்கான நடவடிக்கையில் ஈடுபடுவோம்.

24. மீனவ மக்களுக்கு கல்வி, வேலை வாய்ப்பில் சிறந்த இடம் கிடைக்கும் அளவிலே மண்டல் கமிஷன் அறிக்கையின் படி பழங்குடி மக்கள் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும்.

25. வயதான மீனவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படவும், மோசமான தொழிற் கால கட்டங்களான 4 மாதங்களில் தற்போது வழங்கப்படுகின்ற மாதம் ஒன்றுக்கு ரூ. 1280 ஐ ரூ. 5000/– மாக உயர்த்தித் தர வேண்டும்.

26. மீனவர்களின் படகுகளுக்கு டீசல் , மண்ணெண்ணெய் போன்றவற்றை உற்பத்தி விலையிலே வழங்க வேண்டும்

27. மீனவர் நல்வாழ்வு வாரியம் பெருவாரியாக மீனவ மக்களை நிர்வாகத்தில் கொண்டதாகவும், அந்நிய செலாவணி ஈட்டித்தருகின்ற நம் மக்களின் வருமானத்தில் 10 சதவீதம் சுமார் 6000 /– கோடி ரூபாயை வாரியத்திற்கு , நிர்வாகத்திற்கு செலவிட ஒதுக்க வேண்டும்.

28. சுனாமி நிதியாக அரசு பெற்றுக்கொண்டு இதுவரை கையில் வைத்திருக்கும் பணத்திற்கு செலவு கணக்குகள் காட்டும் வகையில் வெள்ளை அறிக்கை ஒன்றை அரசு வெளியிட வேண்டும்.

29. தமிழ் நாடு முழுவதும் இருக்கின்ற அரசின் ''டாஸ்மாக்'' கடைகளை உடனடியாக மூட வேண்டும்.

30. ஏனைய கடற்கரை மக்கள் அனைவரையும் ஒருங்கிணைக்கப்படாத தொழிலாளர்களாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

31.உப்பளங்களில் பணி புரிகின்ற தொழிலாளர்களுக்கு அந்த உப்பளங்களை லீஸ் கொடுக்கின்ற வகையிலே உப்பளச் சட்டம் மாற்றப்பட வேண்டும்.

32. சுனாமிக்கு பிறகு கடலில் நிகழ்ந்து இருக்கிற மாற்றங்களைப் பற்றி எந்த தகவலும் இல்லாத காரணத்தினாலே முறையான ஆய்வு கடலில் நடத்தப்பட வேண்டும். அதற்கு முன்பு எந்த புதிய திட்டங்களையும் கொண்டு வரக்கூடாது.

33. பழங்குடி மக்களுக்கு அரசு கொண்டு வந்திருக்கும் காடுகளில் பழங்குடி மக்களின் உரிமையை மீட்டுத் தருகின்ற சட்டத்தின்படி பழங்குடி மக்கள் காட்டின் மீது அனைத்து உரிமைகளையும், எல்லாக் காடுகளிலும் (வன விலங்கு சரணாலயங்கள்) உட்பட

உரிமைகள் கிடைக்கச் செய்ய வேண்டும்.

34. கால்நடைகளை மேய்ப்பதற்கு காட்டை நம்பி பிழைக்கும் பாரம்பரிய கிடைக்காரார்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் காடுகளில் முழு உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்றும், நிரந்தர மாடு மேய்க்கும் அனுமதி அட்டை அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

35. கூட்டுவன மேலாண்மை திட்டம் ஏற்படுத்தும்போது மாற்று மேய்க்கால் நிலங்களும், நீர்வள வசதிகளையும் இந்த கிடைகாரார்களுக்கும், கால்நடை வளர்ப்போருக்கும் ஏற்படுத்தித் தரவும், எல்லா வன மேலாண்மை திட்டங்களை அமுல்படுத்தும் போது வனத்தை பயன்படுத்துகிற மக்களுக்கு முழு பங்கேற்பு வழங்கப்பட்டு அவர்களின் ஒப்புதல் பெற வேண்டும்.

36. வனத்துறைக்கு கொடுக்கப்பட்ட நிலங்களையும், மற்றவர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களையும் மீட்டெடுத்து அந்த நிலங்களை அனைத்தும் பழங்குடி மக்கள் ஊராட்சியில் பழங்குடி மக்களின் கட்டுப்பாட்டிலே இருக்க வேண்டும்.

37. பாரம்பரிய வாய்க்கால்களும், வடிகால்களையும் அழித்துவிட்டு அல்லது அவற்றை மாசுபடுத்தி வரும் கம்பெனிகளை உடனடியாக இழுத்து மூட வேண்டுமென்றும் நொய்யல், ஒட்டாபாளையம் அணைகளில் நல்ல தண்ணீர் விவசாயத்திற்கு கிடைக்கக்கூடிய அளவிலே அருகிலிருக்கும் கம்பெனிகளால் சுத்தப்படுத்தப்பட்ட தண்ணீர் மட்டுமே அந்த வாய்க்கால்களில் அனுமதிக்கப்பட வேண்டும். எந்த மாசுபடுத்தும் தொழிற்சாலையையும் நதிகள் அருகில் 5 கி.மீ சுற்று வட்டாரத்தில் அமைய அனுமதிக்கக் கூடாது என்றும், சிறுகுறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசனமும், குடிநீர் வசதியும் தடையின்றி கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

38. ''எய்ட்ஸ்'' பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிறப்பு சத்துணவு வழங்கப்பட வேண்டுமென்றும், மருந்துகள் தொடர்ந்து இலவசமாக கிடைக்க வேண்டுமென்றும், அரவாணிகளின் உரிமைகளை நிலை நாட்ட தனிச்சட்டம் கொண்டு வர வேண்டும். ஊன முற்றோருக்கு சட்டப்படி 3 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டுமென்றும், எண்ணிக்கை கணக்கு சரியாக உள்ளதா என்று கணக்கெடுப்பு செய்ய வேண்டும். என்றும் கல்வி, வேலைநிலை குறித்த வெள்ளை அறிக்கை ஒன்றினை கொண்டு வர வேண்டும். என்றும் ஐ.நா. சபையின் ஊனமுற்றோரின் உடன்படிக்கை ஷரத்துக்களை முறையாக அமுல்படுத்தப்பட வேண்டு மென்றும், இந்திய அரசியல் நிர்ணய 4 – வது ஷரத்தின் படி தனியார் கம்பெனிகளில் 4 சதவீதம் இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

39. அருந்ததியர் மக்கள் மத்தியிலே பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள சுமங்கலிதிட்டம் ஒழிக்கப்பட வேண்டும், அருந்ததியர் மக்களின் மறுவாழ்வுக்கு பொருத்தமான ஒதுக்கீடுகள் செய்யப்பட வேண்டுமென்றும், தற்போது கொடுக்கப்பட்டுள்ள 58 கோடி போதாது, ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டுமென்றும் கோருகின்றோம். இன்னமும் மலத்தை அள்ள சிலரை கட்டாயப்படுத்துகின்ற சூழ்நிலையில் மணல் அள்ளுவதற்கு எதிரான சட்டத்தை விட கடுமையானதாக ஆக்கி, அப்படி கட்டாயப்படுத்து வோர் மீது கொலைத் தண்டனைக்கு ஈடான கடும் அளவிலே மறு சீரமைப்பு செய்ய வேண்டும். அருந்ததியர் மக்களுக்கு மொத்த ஒதுக்கீட்டிலே உப ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

40. ஒருங்கிணைக்கப்படாத தொழிலாளர்களுக்காக ஒதுக்கப்பட்டிருப்பதில் இட ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும்.

41. துப்பரவு தொழில்முறையினை நவீனப்படுத்தி இங்கே நடக்கின்ற கேவலங்கள் நிறுத்தி வைக்கப்பட வேண்டும்.

42. தகவல் தொழில்நுட்பத் துறையில் தொழிற்சங்கங்கள் அமுல்படுத்தப்பட்டு அதன் மூலம் பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

43. குறைந்தபட்ச கூலி விஷயத்திலேயே பெண்களுக்கு சரியான கூலி கிடைக்க வழி வகை செய்ய வேண்டும்.

44. வாழ்நிலை, வேலை சூழ்நிலை போன்றவை பெண்களுக்கு மேம்படுத்தித் தரப்பட்டு, அவர்கள் பாதுகாப்பான முறையிலே தொழில் செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டும். ஓர் இடத்தை விட்டு நகர்ந்து சென்று தொழில் செய்யும் குடும்பங்களில் உள்ள பெண்களுக்கு வசதியாக அதற்குத் தங்கி இருக்கும் பகுதியிலேயே ரேசன் போன்ற வசதிகள் அமைக்க வழிவகை செய்யவேண்டும்.

45. அரசின் திட்டங்களை இலவச அடுப்பு , இலவச பட்டா போன்றவை பற்றிய சரியான கணிப்பு வெளியிடும் அளவிலே சமூக தணிக்கை நடத்தி பெண் தொழிலாளர்களுக்கு சரிவர சலுகைகள் வழிவகை செய்ய வேண்டும்.

தொகுப்பு
குருசாமி , பியான் தமிழ்நாடு
40 பீ. பி.டி. இராஜன் சாலை, மதுரை – 2
தொலைபேசி : 944 32 79225

## செங்கல்பட்டு முகுந்தனின் வேளாண்மை உத்திகள்

காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல் பட்டில் வசித்து வரும் திரு. முகுந்தன் பல ஆண்டுகளாக வேளாண்மையில் இரசாயன இடு பொருள் இன்றியும், புதிய விவசாய கருவிகள், நாட்டு இனமாடுகள், பராமரித்து நல்ல வருவாய் ஈட்ட பாடுபட்டு வருகிறார். ஆரம்ப காலத்தில் விவசாயத்தில் முதலீடு செய்து பின்னர் நல்ல வருமானம் எடுக்கலாம். என்ற மன உறுதியுடன் செயல்படுகிறார். இவரின் உத்திகள் ''நம்வழி வேளாண்மை பருவம் 15 இதழ் 1 (ஏப்ரல் – ஜுன் 2006) ல்'' ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ளன. இவருடைய புது உத்திகளை கீழே கொடுத்து உள்ளோம்.

**மடகாஸ்கர் முறை நெல் சாகுபடியில் உத்திகள்**

மடகாஸ்கர் முறையில் சீரகசம்பா நெல் நாற்றங்கால் ஏற்படுத்தி 15 நாளில் நடவு செய்கிறார். பயிருக்கு பயிர் வரிசைக்கு வரிசை 1 1/2 அடி இடைவெளி விட்டு நடுகிறார். நட்டு காய்ந்த பின் பயிருக்கு இடையில் ''கோன்வீடர்'' என்று கூறப்படும் 3 சக்கர 5 பிளேடு கொண்டை களையெடுக்கும் கருவியை சுயமாக வடிவமைத்துள்ளார்.



இதனை இழுத்துக கொண்டு செல்ல ஒரு நாட்டு மாடு மூலம் எடுப்பது இலகுவானது என்று கூறுகிறார். மாடு வைத்து களையெடுத்தால் ஒரு நாளில் 2 ஏக்கரில் களையெடுத்து விடலாம். 2 ஆள் வைத்து களையெடுத்தால் ஒரு நாளில் 50 சென்ட் தான் எடுக்க முடியும். இந்த கருவி கொண்டு குறுக்கும் நெடுக்கும் எடுக்கலாம். மாடு வைத்து களையெடுக்கும் சமயம் மாடு திரும்ப ஏதுவாக வரப்பு ஓரமாக ஒரு வரிசை நெல் பயிர் செய்யாமலிருப்பது நல்லது . மாட்டு குழம்பு பெரியதாக உள்ள பெரிய மாடுகளில்லாமல் சின்ன நாட்டு மாடுகள் சென்றுவர ஏதுவாகும். இல்லையெனில் 2 அடி இடைவெளியில் நெற்பயிர் நட வேண்டும். இந்த கோன்வீடருக்குப் பின் உருளை வடிவான பிளேடு மட்டம் செய்யும் கருவியை பயன்படுத்துவதால் நன்றாக கட்டிகள் உடையும். மேற்படி கருவிகளை மாறி மாறி உபயோகப்படுத்துவதாகக் கூறுகிறார்.

நெல்லுக்கு 15 வது நாளில் கை களையெடுப்பது சிறந்தது. இதனால் பயிருக்கு பக்கத்திலுள்ள களையை முற்றிலும் அகற்ற வாய்ப்புண்டு. ஒவ்வொரு தடவை நீர் பாய்ச்சும் சமயம் அமிர்த கரைசல் , ஈ.எம் (effective micro organisms) கோழி சாணம் கலந்து உரம் வைக்க வேண்டும். இவர் ஒவ்வொரு பயிர் குத்திற்கும் சுமார் 50 கிராம் கோழியுரம் (மக்கிய கோழியுரம்) இடுகிறார். பின்னர் அமிர்த கரைசல், இ.எம். இயற்கை நுண்ணுயிரி உரம் கலந்த கலவை 450 லிட்டர் எடுத்து பின்னர் இதை 3 மடங்கு நீரில் கலந்து 50 சென்ட் நிலத்திற்கு பயிர் அருகாமையிலே / வரிசையில் ஊற்றிவிடுகிறார். இவ்வாறு செய்வதால் தூரிற்கு 25 – 50 நாற்று கனுக்கள் (tillers ) உள்ளன என்று கூறுகிறார். இயற்கை முறையில் சாகுபடி செய்யும் போது இயற்கை உரம் தாராளமாக கொடுக்கவில்லையெனில் விளைச்சல் பாதிப்படையும்.

**உழவுமாடு கொண்டு டிஸ்க் கலப்பை ஓட்டுதல்**

டிராக்டரில் தான் டிஸ்க் கலப்பை பொறுத்தப்பட்டு உழவிற்கு பயன்படுத்துகின்றனர். வட மாநிலங்களில் உழவு மாடு கொண்டு களையெடுத்தல், டிஸ்க் கலப்பையை பயன் படுத்துதல் பழக்கத்தில் உள்ளன. இந்த மாதிரி தமிழ்நாட்டில் டிஸ்க்கலப்பையை வைத்து சேற்று , புழுதியில் உழுவு செய்யலாம். இந்த டிஸ்க் கலப்பை செய்ய ரூ. 3,500 செலவாகும். இதில் 4 டிஸ்க் வைக்கப்பட்டுள்ளது. இதனை மாடு கட்டி உழவு செய்யும் 3 ஏர் வேலையை 1 ஏர் செய்து விடும்.

இதில் ஒருவர் உட்கார்ந்து ஓட்டவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் வீல் சுத்துவதால் பிரிக்ஸன் கம்மி. இதை சேற்றில் ஓட்டினால் வருடத்திற்கு 1 தடவை 3 பேரிங் மாற்ற வேண்டும். டிராக்டரில் ரொட்டேவேட்டர் செய்யும் வேலையை இந்த



டிஸ்க் கலப்பை செய்யும் நிலத்தில் அறுவடைக்கு பின்னர் பயிர் கழிவையும், பசுந்தாள் உரச்செடியையும் இதன் மூலம் மண்ணோடு சேர்த்து உழுது மட்கவிடலாம். இதனால் நிலத்தில் கட்டிகளும் இருக்காது. ரொட்டேருவேட்டரில் சாப்ட் போய்விட்டால் ரூ. 25,000 வரை செவவழிக்க வேண்டும். ஆனால் இவ்வளவு செலவு இந்த டிஸ்க் கலப்பையில் வராது. இதனை கரும்பு, வாழை பயிரில் களையெடுக்கவும் பயன்படுத்தலாம்.

**நிலத்தில் கட்டி உடைத்து சமம் செய்ய**

நெல் போட்டபின் புழுதியில் நிலக்கடலைக்காக உழவு செய்யும் சமயம் நிலத்தில் கட்டிகள் உண்டாகும். இந்த கட்டிகளை உழுது பின் உடைக்க ஆள் வைத்து வேலை செய்ய வேண்டும். இதனால் செலவு பிடிக்கும். இதற்கு 8–9 அடி நீளம் கொண்ட ஆர்.சி.பீம். / பில்லர் ஒன்றில் 2 ஹுக் வளையம் வைத்து இதனை டில்லருக்குப்பின் இணைத்து விட வேண்டும்.



பின்னர் நிலக்கடலைக்கு பாத்தி கட்டும் சமயம் நம்வழி வேளாண்மை பருவம் 12 இதழ் – 3 ல் குறிப்பிட்டது. போன்று 2'' ரிட்ஜ் போட்டு விதைக்க வேண்டும்.

**இயற்கை உரம் திரவமாக கொடுத்தல்**

நிலக்கடலைக்கு ஒவ்வொரு தடவையும் நீர் பாய்ச்சும் சமயம் அமிர்த கரைசல், மோர் சேர்ந்த கலவையை ஒவ்வொரு வாய்க்கால் வரிசைக்கும் தெளித்து நீர்விட வேண்டும். இவ்வாறு செய்து வந்ததில் நிலக்கடலையின் தண்டு நல்ல கனத்துடன் தடியாக வந்தது. வேரில் வேர் முடிச்சுகள் அதிகம் காணப்பட்டன. மானாவாரி நிலத்தில் போதுமான ஈரம் இல்லாவிட்டால் இரசாயன உரங்கள் பயிர் கிரகிப்பது கடினம். ஆனால் திரவ வடிவில் இயற்கை உரத்தை கொடுக்க நல்ல பலன் கிடைக்கும்.

முற்றாத தேக்குமர பலகை கொண்டு கதவு பெஞ்சு செய்தால்

தோட்டத்தில் சில காரணங்களினால் 5–6 வருட தேக்கு மரங்களை வெட்ட நேரிடும். அப்போது வைரம் வைக்காத மரங்களை பெரும்பாலும் விறகுக்தான் பயன்படுத்துவோம். ஆனால் இம்மரங்களில் அரையடி வரை அகலமுள்ள (1/2 '' கனம்) பலகைகள் அறுத்து பின்னர் இப்பலகைகளை குறுக்கு, நெடுக்கு, குறுக்கு என 3 பகுதிகளாக ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கி கதவு, பெஞ்சுகள் தயார் செய்யலாம். இதனால் கதவு, பெஞ்சு தயாரிக்க செலவும் கம்மி. இது பிளைவுட் பலகையில் செய்வதை விட மிகவும் உறுதியானதாகும். 1/2'' கனம் உள்ள கதவுகள் செய்யலாம். இதில் பிளைவுட் பலகையை மேலே ஆணி வைத்து ஒட்டிவிட்டால் பார்ப்பதற்கு நல்ல வடிவமும் உறுதியும் கிடைக்கும் 4'X 8' அகலமுள்ள மரக்கதவு செய்ய ரூ. 1,500 வரை செலவாகும். பிளைவுட்டில் இது போன்று கதவு செய்ய சதுர அடிக்கு ரூ. 35 செலவு ஆனாலும் நல்ல உறுதி கட்டித் தன்மை கிடைக்காது.

முகவரி
திரு. முகுந்தன்
92 இராஜாஜி தெரு, செங்கல்பட்டு
தொலைபேசி : 044 – 27423902 , 9382337818

## குமாரின் கால்நடை மூலிகை வைத்திய அனுபவங்கள்

**மாட்டிற்கு சொறி வந்தால்**

எலுமிச்சம் பழச்சாறு 100 மி.லி கருப்பட்டி 100 கிராம் , உப்பு 25 கிராம், எள் தூள் 25 கிராம், நல்லெண்ணெய்

150 மி.லி ஆகியவற்றைச் சேர்த்து அரைத்து 3 அல்லது 5 நாட்கள் தடவி விட குணமாகும். பின் 2 மணி நேரம் கழித்து குளிப்பாட்ட வேண்டும்.

**மூச்சு விட திணறினால்**

ஓமம் 10 கிராம், வசம்பு 10 கிராம், மாவிலங்கபட்டை 10 எண்ணிக்கை, சுக்கு 10 கிராம், சிற்றரத்தை 10 கிராம், திப்பிலிவேர் 5 கிராம் ஆகியவற்றை அரைத்து நெல்லிக்காய் அளவு உருண்டை செய்து வெந்நீர் அல்லது குருணைக் கஞ்சியுடன் சேர்த்துக கொடுக்க வேண்டும்.

முகவரி
திரு.த. குமார்.
குருவம்பட்டி
சோழங்கநால்லூர் அஞ்சல்
திருச்சி – 621 213
தொலைபேசி : 9965272158

**தக்காளி பீட்ரூட் பாதுகாத்தல்**

தக்காளி அதிகமாக பயிர் இட்டு வந்தேன். பழம் இருக்கும் பொழுது விலை கிடைப்பது இல்லை. விலை இருக்கும் பொழுது பழம் இருப்பதில்லை. அதனால் இதை நீண்ட காலம் பாதுகாக்க முடிவுக்கு வந்தேன். ஒரு கிலோ தக்காளி பழத்துக்கு கால் கிலோ அடுப்பு கறி இரண்டையும் கலந்து வைத்து அதை 4 மாதங்கள் வரை பாதுகாத்தேன். அதே இரசாயன உரம், பூச்சி மருந்து பயன்படுத்தாத தக்காளியாக இருந்தால் 6 மாதங்கள் வரை கெடாமல் பாதுகாக்கலாம். (இதே உத்தியை ‘‘நம் வழி வேளாண்மை’’ பருவம் 4 இதழ் 2 ஜுலை – செப்டம்பர் 1995 ல் வெளியிட்டுள்ளோம் – ஆசிரியர் .

பீட்ரூட் கிழங்கை பாதுகாத்தல் : நல்ல தரமான பீட்ரூட் கிழங்குகளை அறுவடை செய்து வேரும் காம்புகளும் அகற்றிவிட்டு நிழலான இடத்தில் ஒரு கிலோ கிழங்கிற்கு 1/2 கிலோ மணல் பயன்படுத்தி நிழற்பாங்கான இடத்தில் பாதி கிழங்கு மணலில் மூழ்குமாறு வைத்துவிட்டால் இரண்டு மாதம் பாதுகாக்கலாம். அதையே வேரும் மேல் காம்புகளும் சுத்தமாக அகற்றி விட்டு முழுமையாக மணலில் மூடிவைத்து விட்டால் 4 மாதங்கள் வரை பாதுகாக்கலாம்.

முகவரி
திரு.பி. செல்வராஜ்
2/103 இராகல்பாவி தோட்டம்
சுண்டக்காம்பாளையம் அஞ்சல்
உடுமலை , கோயம்புத்தூர் மாவட்டம் – 642 132
தொலைபேசி : 9842270519

## தவிடம்மாளின் கால்நடை மூலிகை வைத்தியம்

சிவகாசிக்கு அருகே உள்ள காக்கிவாடன் பட்டி கிராமத்தில் திருமதி. தவிடம்மாள் பசுபாதுகாப்பு மையம் வைத்து 150 நாட்டு மாடுகளை பராமரித்து வருகிறார். இவர் கடந்த 30 வருடங்களாக தான் பராமரித்து வரும் மாடுகளுக்கு கீழ்க்கண்ட அனுபவ வைத்தியங்களை கடைபிடித்து வருகிறார்.

**கால்காணைக்கு**

மழை காலத்தில் இந்த நோய் வரும். இதற்கு காலில் உள்ள புழுக்களை வெளியேற்ற வேண்டும். பின்னர் வேப்பெண்ணெய் , அந்துருண்டை இரண்டையும் கலக்கி 1 நாளைக்கு 2 தடவை வீதம் 2 நாட்கள் புண்ணில் வைத்தால் விரைவில் குணமாகிவிடும்.

**சப்பை நோய்க்கு**

பலவகையான தண்ணீர் குடிப்பதால் இந்த நோய் வரும். சளி , இருமல் இருக்கும். 1/4 கிலோ மூங்கில் இலையை 2 நாட்கள் உட்புறம் கொடுத்தால் சரியாகிவிடும். சாம்பிராணி சிறிதளவு, வேப்பம்பட்டை சிறிதளவு மற்றும் ஓமம் சிறிதளவு காலையிலும் , மாலையிலும் புகைமூட்டம் போட்டால் நீங்கிவிடும்.

**இரத்தக்கட்டுக்கு**

மாட்டை அடித்தல் , உராய்வு போன்ற காரணங்களால் உண்டாகும்.

மஞ்சணத்தி இலை சிறிதளவு மற்றும் வெங்காயம் எடுத்து இடித்து நல்லெண்ணெயில் வதக்கி ஒத்தடம் 1 நாளைக்கு 1 தடவை வீதம் 3 நாள் கொடுத்தால் நோய் நீங்கிவிடும்.

**மலச்சிக்கலுக்கு**

பல வகையான தீவனத்தை உண்பதால் உண்டாகும். நாட்டு வாழைப்பழம் 5 (தோலை நீக்கிவிட்டு) வெண்ணெயில் தடவி 3 தடவை கொடுத்தால் மலச்சிக்கல் சரியாகி விடும்.

**மாடு ரத்தமாக சிறுநீர் கழிந்தால்**

கீழாநெல்லி 1 பிடி, சீரகம் 1 ஸ்பூன் கட்டியாக அரைத்து 100 மி.லி புளிச்ச தண்ணீர் அல்லது மோரில் 1 முறை கொடுத்தால் குணமாகிவிடும்.

**அசைபோடாமை / ஜீரணம் இல்லாமை**

சுக்கு 2 கட்டி, மிளகு 10 கிராம், வெற்றிலை 6 ,

பெருங்காயம் 1 கட்டி, வெங்காயம் 100 கிராம் ஆகியவற்றை சேர்த்து அம்மியில் அரைத்து காலையில் 1 தடவை வீதம் 2 அல்லது 3 நாட்கள் கொடுத்தால் நிவர்த்தியாகிவிடும்.

**கண் வலிக்கு**

சுடு சோற்றில் நல்லெண்ணெய் (3 ஸ்பூன்) சேர்த்து கண்ணில் ஒத்தடம் 3 நாட்கள் கொடுத்தால் சரியாகிவிடும்.

**மடி நோய்க்கு**

ராமகட்டி, எலுமிச்சைசாறு எடுத்து நன்றாகக் குழப்பி போட வேண்டும். அல்லது வண்டல் மண் எடுத்து தண்ணீர் கலக்கி வடிகட்டி தண்ணீரை மடுவில் 3 நாட்கள் தேய்த்து வர வேண்டும்.

**சினை பிடிக்காமைக்கு**

ஆணை நெருஞ்சி 1/2 கிலோ இடித்து கொடுத்தால் சினைபிடித்துவிடும். ஒரு நாள் விட்டு ஒரு நாள் 3 தினங்கள் கொடுக்க வேண்டும்.

**கழிச்சலுக்கு**

துத்தி சிறிதளவு, சீரகம் 25 கிராம் இரண்டையும் சேர்த்து அரைத்து 1 நாளைக்கு 1 தடவை வீதம் 2 நாட்கள் கொடுத்தால் சரியாகிவிடும்.

முகவரி
திருமதி. தவுடம்மாள்
கிருஷ்ணாகோசாலை
காக்கிவாடன்பட்டி , ஆலங்குளம் வழி
சிவகாசி தாலுகா , விருதுநகர் மாவட்டம்
தொலைபேசி : 04562 – 237373

கிருஷ்ணமூர்த்தியின்
கால்நடை மூலிகை வைத்தியம்

திரு. கிருஷ்ணமூர்த்தி 55 வயதாகிறது. இவர் மூலிகை வைத்திய முறைகளை திரு. கோபால்சாமி அவர்களிடமிருந்து கற்றுக் கொண்டார். இவரது வைத்திய முறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**எலும்பு முறிவுக்கு**

கோழி முட்டை வெள்ளைக் கரு, தோல் இல்லாத உளுந்த மாவு, பச்சரிசி அரைத்து கட்ட வேண்டும்.

தைலம் : தேவாரக்கொட்டை 100 கிராம் , வால்மிளகு 50 கிராம், கடுகு எண்ணெய் 1/4 லிட்டர், சாம்பிராணி 25 கிராம் ஆகாசவேர் 50 கிராம், நிலப்பனைக்கிழங்கு 50 கிராம், பச்சை கற்பூரம் 25 கிராம், சடக் சோரக்கிழங்கு 25 கிராம், வெற்றிலை சாறு 100 மி.லி கருவேலம் பிசின் 50 கிராம் எடுத்து ஒன்றாக அரைத்து, நல்லெண்ணெய் 1 லிட்டர் நன்றாகக் காய்ச்சி வடிகட்டி இறக்கி வைத்துக் கொண்டு முறிந்த இடத்தில் வைத்து கட்டுப்போட வேண்டும். முதல் கட்டு 3 நாள் இருக்க வேண்டும். 40 நாளைக்கு 1 நாள்விட்டு 1 நாள் கட்டி வர வேண்டும்.

**விஷக்கடிக்கு**

சிறியாநங்கை 50 கிராம், வெள்ளருகு 50 கிராம், மிளகு 10 கிராம் ஆகியவற்றை சேர்த்து அரைத்து காலை மாலை மறுநாள் காலை என கொடுக்க சரியாகும்.

**நல்ல பாம்பு கடிக்கு**

நாகதாளி வேர் அரைத்து கொடுக்க வேண்டும்.

**சொறி சிரங்கு வந்தால்**

வெள்ளை செம்பருத்தி இலையை பால் 100 மி.லி உடன் தேங்காயெண்ணெய் 100 மி.லி கலந்து பூச சரியாகும்.

**கண்ணில் பூ விழுந்தால்**

முருங்கை இலை சாற்றை கண்ணில்விட்டு வந்தால் சரியாகும்.

முகவரி
திரு. ஏ கிருஷ்ணமூர்த்தி வைத்தியர்
தோப்பூர்ரோடு , கரம்பஷளை அருகில்
ஆர் / 244. வாய்க்கால் தெரு
கிருஷ்ணாநகருக்கு எதிர்புறம் , திருச்செந்தூர்
தொகுப்பு : ஆர் ஞானசுந்தரி ,சேவா

## தோப்பூர் பாப்பாவின் கால்நடை மூலிகை வைத்தியம்

**அஜீரணத்திற்கு**

வெற்றிலை 5 மிளகு 5, சுக்கு 3 கிராம் , தட்டி உள்ளே கொடுக்க வேண்டும். அல்லது தேங்காயெண்ணெய் 50 மிலி உள்ளே கொடுக்க வேண்டும்.

**வயிற்றுப்போக்கிற்கு**

ஒரு ஆட்டுக்கு 50 மி.லி தேங்காயெண்ணெய் உள்ளே கொடுக்க வேண்டும்.

**காணைக்கு**

உப்புடன் நீராகாரம் சேர்த்து வாயில் ஊற்ற வேண்டும்.

முகவரி
திருமதி . பாப்பா
க/பெ. மலையப்பன்
211 புதுத்தெரு, தோப்பூர்
திருச்செந்தூர் – 628 215
தொகுப்பு : ஆர் . ஞானசுந்தரி , சேவா

## தோப்பூர் மரியாளின் கால்நடை மூலிகை வைத்தியம்

திருச்செந்தூர் புதுத்தெருவைச் சேர்ந்த மரியாளின் கால்நடை மூலிகை வைத்தியம் பின்வருமாறு.

**அஜீரணத்திற்கு**

வெற்றிலை 5 , மிளகு 5 , சுக்கு 3 கிராம் தட்டி உள்ளே கொடுக்க வேண்டும்.

**இளங்கொடி வெளியேற**

1/2 கிலோ பூவரசு இலையை தின்ன கொடுத்தால் இளங்கொடி வெளியேறி விடும்.

**காணை**

வேப்பெண்ணெய் 100 மில்லி சூடம் 10 சிறிது மஞ்சள் கலந்து வாயில் ஊற்ற வேண்டும்.

முகவரி
திருமதி. மரியாள்
க/பெ. சின்னத்துரை
புதுத்தெரு, தோப்பூர் , திருச்செந்தூர் – 638215
தொகுப்பு : ஆர், ஞானசுந்தரி , சேவா

### அன்னக்கிளியின் கால்நடை வைத்தியம்

**அஜீரணத்திற்கு :** சுக்கு 50 கிராம், மஞ்சள் சேர்த்து புகை போட்டால் சரியாகும். அல்லது சுக்கு 50 கிராம், பனை வெல்லம் 1/4 கிலோ எடுத்து உருண்டையாக உள்ளே கொடுத்தால் சரியாகும்.

**வயிற்றுப்போக்கு**

வயிற்றுப்போக்கினால் பாதிக்கப்பட்ட மாட்டை ஒரு நாளைக்கு 3 முறை குளிப்பாட்டினால் போதும்.

**எலும்பு முறிவுக்கு**

புளியங்கொட்டை 50 கிராம் அரைத்து கொட்டப்பாக்கு 10 கிராம் அரைத்து கோழி வெள்ளைக்கரு சேர்த்துப் பத்துப்போட வேண்டும்.

**சொக்கிக்கொண்டால்**

கருப்பட்டி, சுக்கு இடித்து உள்ளே கொடுத்தால் போதுமானது.

**காணைக்கு**

உப்பு ,மோர் சேர்த்து உள்ளே கொடுத்தால் போதும். அல்லது மஞ்சள் கிழங்கு பொடி செய்து புண்ணில் தடவ வேண்டும்.

முகவரி
திருமதி. அன்னக்கிளி
க/பெ. பேரின்பம், புதுத்தெரு , தோப்பூர்
திருச்செந்தூர் – 628 215
தொகுப்பு : ஆர். ஞானசுந்தரி , சேவா

## வாசகர் வட்டம்

கண் வெள்ளைப்படுதலுக்கு நம் வழி வேளாண்மை பருவம் 15 இதழ் 1–ல் என்னுடைய வைத்திய முறைகளை வெளியிட்டிருந்தீர்கள். இதில் நான் செய்யும் வைத்தியமான கண் வெள்ளை படுதலுக்கு பின்பற்றப்படும் வைத்திய முறை கூறப்பட வில்லை. கண் வெள்ளை படுதலுக்கு 4–5 உடைக்காத துவரம் பருப்பினையும் 4–5 நந்தியாவட்டம் பூவினையும் நனையச் செய்து, சிலமணி நேரம் ஊறச் செய்து, துணியில் வைத்து பிழிந்து விட கண் வெள்ளைபடுதல் மற்றும் கண் பாதிப்பு நோய்கள் குணமாகும். இவ்வாறு செய்தும் குணமாகவில்லையெனில் ஆத்திமர இலையும், சீரகத்தையும் மென்று கண்ணில் விட கண்பாதிப்பு நீங்கும்.

சில நாட்களுக்கு முன்பு மதுரை செல்லூரில் என்னுடைய உறவினர் வீட்டிற்கு சென்றிருந்தேன். அப்பொழுது பக்கத்து வீட்டில் பால்மாடுகள் பராமரித்து வரும் ஒரு பெண்மணி என்னிடம் ஓடி வந்து ஒரு எருமை மாடு படுத்துக் கொண்டு முடியாமல் உள்ளது என்று கூறினார். நான் உடனே அவர்கள் மாட்டு பண்ணைக்குப் போய் பார்த்தேன். அந்த அம்மா நாமக்கல்லிலிருந்து ரூ. 10,000 த்திற்கு ஒரு எருமை மாடு வாங்கி பால் கறந்து வந்திருந்தது. எருமை மாடு சுடுகாட்டுக்கு அருகே மேய்ந்து கொண்டிருந்த சமயம் ஏதோ ஒரு பாம்பு கடித்து பின்னர் கொட்டத்திற்கு வரவும் கண், மடி வீங்கி படுத்து மயங்கிவிட்டது. நான் உடனே காப்புக்கட்டு (கூலைப்பூ) இலையை பிடுங்கிக்கொண்டு வந்து 20 மிளகு சேர்த்து மென்று மாட்டுக்கு கண்ணில் துப்பிவிட்டேன். பின்னர் மூக்கின் வழியாக ஊதி விட்டேன். இந்த வைத்தியத்தால் மாடு பிழைத்துக் கொண்டது. இது தவிர கீரி பச்சிலை இலையுடன் மிளகு சேர்த்தும் எந்த விஷக்கடிக்கும் கொடுத்தால் குணமாகும். இந்த வைத்தியத்தை நான் இது வரை பல ஆயிரக்கணக்கான நபர்களுக்குக் கொடுத்து குணப்படுத்தியுள்ளேன்.

வைத்தியர் முகவரி
திரு.க. அய்யாகோனார்
இடையபட்டி, நடுப்பட்டி கிராமம்
உத்தப்பநாயக்கனூர் அஞ்சல்
உசிலம்பட்டி தாலுகா , மதுரை மாவட்டம்

திருப்பகுதியில் 1–3 டிசம்பர் 2007 ல் நடைபெற்ற வந்தே ''கோமாதரம்'' என்ற பசுபாதுகாப்பு கருத்தரங்கத்தில்

சேவா மூலம் நானும் கலந்து கொள்ள வாய்ப்பு கிடைத்தது. இந்த கருத்தரங்கில் அழிந்து வரும் பாரம்பரிய நாட்டு ரக மாடுகளை பாதுகாத்தல், சாண எரிவாயு மூலம் வண்டி ஓட்டும் தொழில்நுட்பம் , மாட்டு கோமியத்திலிருந்து இயற்கை மருந்து, டானிக் , ஷாம்பு தயாரித்தல் பற்றி தெளிவாக தெரிந்து கொண்டேன். இந்த கருத்தரங்கு எனக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. (இக்கருத்தரங்கு மலரை பெற விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரியை நாடலாம் .

Dr.K. Haranath Reddy , Vande Gomatharam workshop Secretary . Tirumala Tirupati Devasthanams , Tirupati - 517 502. Andhrapradesh. Ph : 226 4570

முகவரி
திரு.டி. குமார்
குருவம்பட்டி
சோழங்கநல்லூர் அஞ்சல்
மணச்சநல்லூர் தாலுகா
திருச்சி மாவட்டம் – 621 213
தொலைபேசி : 9965272158

நாங்கள் ஒரு கோசாலை நடத்தி வருகிறோம். எங்கள் கோசாலையிலுள்ள மாடுகளை பராமரிக்க 5 குடும்பங்கள் தேவை உள்ளது. தங்குமிடம் உணவு கொடுத்து திறமைக்குத் தகுந்தாற் போல் குடும்பம் ஒன்றுக்கு ரூ. 2,500 முதல் ரூ. 3,000 வரை மாத சம்பளம் வழங்கலாம். எனவே எங்கள் கோசாலை, பராமரிப்பு , மண்புழு உரம் தயாரிப்பு வேலைக்கு 5 குடும்பம் (5, ஆண் , 5 பெண்) தேவைப்படுகிறது. தகவலுக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

முகவரி
ஜி.எஸ் தளபதி
1377 , கம்பன்நகர் , புதுகோட்டை – 622 033
தொலைபேசி : 0432 – 2261139
செல் : 9443593339

நாட்டு மாட்டிலிருந்து பஞ்சகவ்யாவை புராதாண முறையில் தயார் செய்து நோயை குணப்படுத்துதல் என்னுடைய மனைவிக்கு எலும்பு புற்று நோய் இருந்து வந்தது. இதற்கு ரேடியேசன் தெரப்பி மூலம் வைத்தியம் செய்தோம். பின்னர் பஞ்சகவ்யா அருந்த கொடு முடி நடராஜன் வைத்தியர் கூறியிருந்தார். பஞ்சகவ்யாவை வேத முறையில் தயார் செய்ய நாட்டு பசுக்கள் காராம் பசு (கருப்பு பசு ) கபிலப்பசு (பழுப்பு நிற பசு) இவைகளைத் தருவித்து பஞ்சகவ்யா தயார் செய்கிறேன்.

**தயாரிப்பு முறை**

சாணம் 5 கிராம், மூத்ரம் 35 மி.லி பால் 245 மி.லி தயிர் 105 மி.லி நெய் 35 மி.லி தர்பை ஜலம் 35 மி.லி இதை தயார் செய்து தினமும் காலை ஆகாரத்திற்கு முன் 20 மி.லி சாப்பிட்டு வர நல்ல முன்னேற்றம் கிடைத்து வருகிறது.

முகவரி
திரு. முகுந்தன்
92 , இராஜாஜி தெரு
செங்கல்பட்டு

## பிரமிடு பந்தல் அமைத்து படரும் பயிர்

**சாகுபடி** : என்னுடைய நிலத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே அவரை சாகுபடி செய்ய ''பிரமிட் வடிவ'' பந்தலை வடிவமைத்துள்ளேன். இதை பற்றிய முழு விவரம் நம்வழி வேளாண்மை பருவம் 14 , இதழ் – 2 (ஜுலை – செப்டம்பர் 2005 ) – ல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த பிரமிட் பந்தலில் அவரைப் பயிரின் அறுவடையின் போது 11 அடிக்கு மேலே உள்ள அவரை காயை பறிக்கும் போது சிரமமாய் இருந்ததால் பந்தலின் உயரத்தை 4 அடியாக குறைத்து 11 அடிக்குள் வடிவமைத்துளேன்.

**மாற்றம் செய்யப்பட்ட அளவுகள் :** இந்த பிரமிட் பந்தலை செவ்வக வடிவில் வடிவமைத்துள்ளேன். பந்தலின் நீளம் 42 அடி, அகலம் 21 அடி, 11 அடியாகவும் உள்ளது. என்னுடைய பந்தலைப் போன்று 3 இடங்களில் அமைத்துக்கொடுக்க 3 விவசாயிகள் கேட்டுள்ளனர். நன்மைகள் : 1. பந்தலின் உயரம் 11அடியாக இருப்பதால் , அவரைக்காய் பறிக்கம் போது எந்த பிரச்சினையும் இல்லை.

2. பந்தலின் உள்ளே ஆடு, கோழி வளர்க்கவும் மற்றும் ஆட்கள் நடமாடவும் எளிதாக உள்ளது. 3. பராமரிப்பு செலவு குறைவாக உள்ளது. இந்த பந்தல் அவரை , பீன்ஸ் , புடலை , பீர்க்கு , திராட்சை, பாகை போன்ற படரும் பயிர்களுக்கு ஏற்றதாகும்.

முகவரி
திரு.எஸ் வேலுச்சாமி
ஜெ. மெட்டூர் , கொடைரோடு வழி
நிலக்கோட்டை தாலுகா , திண்டுக்கல்
தொலைபேசி: 92451–17438 : 9787259142

# மாதம்பட்டி தேவராஜனின் விவசாய கருவிகள்

திரு. தேவராஜன் (48) என்பவர் தருமபுரி மாவட்டம் பாலக்கோடு தாலுகாவைச் சார்ந்த மாதம்பட்டி என்னும் கிராமத்தில் வசித்து வரும் விவசாயி ஆவார். இவர் பத்தாம் வகுப்பு வரை படித்துவிட்டு அதன் பிறகு கடந்த 25 ஆண்டுகளாக கரும்பு, வாழை, மா முதலிய விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறார். இவருக்கு சொந்தமாக 27 ஏக்கர் நிலம் உள்ளது. இவர் கடந்த சில ஆண்டுகளாக விவசாய வேலை செய்ய ஆட்கள் பற்றாக்குறை பிரச்சினையை சந்தித்து வந்தார். அதற்கு தீர்வு காணும் பொருட்டு கீழ்க்காணும் முறையை வடிவமைத்துள்ளார்.

**டிராக்டரில் மாட்டக் கூடிய பார் போடும் கலப்பை**

கரும்பு பயிருக்கு பார்போடும் கலப்பையை 3 அடி அகலம் முதல் 5.1/2 அடி அகலம் வரை மாற்றக்கூடிய அளவில் வடிவமைத்து உள்ளார். இந்த கலப்பையை 50 ஹெச்.பி, ஹெச்.எம்.டி டிராக்டரில் இணைத்து பார் போடும் வேலைகளை செய்து வருகிறார். அவ்வாறு பார்போடும் போது, டிராக்டரை இயக்க 1 நபர் மட்டும் போதுமானது , வேறு எந்த ஆட்களும் தேவையில்லை. ஒரு ஏக்கர் பார்போட 31/2 மணி முதல் 4 மணி நேரம் ஆகிறது. இவர் ஒப்பந்த அடிப்படையில் அருகில் உள்ள விவசாயிகளின் நிலத்தில் பார் போட்டு கொடுத்து வருகிறார். ஒரு மணி நேரத்திற்கு ரூ. 550 வீதம் விவசாயிகளிடம் இருந்து பெற்றுக்கொள்கிறார். ஒரு ஏக்கருக்கு பார்போட செலவு ரூ. 1,925 முதல் 2,200 வரை ஆகிறது. ஆனால் வேலை ஆட்கள் மூலம் செய்தால் ஓர் ஏக்கருக்கு பார் அமைக்க ரூ. 5,500 முதல் ரூ. 6,000 செலவாகிவிடும்.



**சிறப்பு அம்சங்கள்**

இந்த கலப்பை பயன்படுத்தி பார் போடுவதினால் 1 ஏக்கருக்கு ரூ. 3,375 முதல் 3,800 செலவு குறைகிறது. இந்த கலப்பை பயன்படுத்தும் போது நிலத்தில் 1.1/4 அடி பறித்துக் கொண்டே செல்வதால் சொட்டு நீர் பாசனம் அமைக்க எளிதாகிறது.

டிராக்டரை ஓட்டும் 1 நபரை தவிர வேறு ஆட்கள் தேவையில்லை. பாரின் அகலத்துக்கு ஏற்ப 3 அடி முதல் 5.1/2 அடி வரை கலப்பையின் அகலத்தை தட்டி, குறைத்து கொள்ள முடியும்.

**2. வாழை கன்று நடவு செய்ய பயன்படும் ஒற்றை கலப்பை**




வாழை சாகுபடியின் போது வேலை ஆட்கள் பற்றாக்குறை மற்றும் கூலி அதிகரிப்பு போன்ற பிரச்சினை இருந்து வந்ததினால் கன்று நடவுக்கான குழி தோண்டுதல் மற்றும் தண்ணீர் பாய்ச்சும் வாய்க்கால் பறித்தல் ஆகிய வேலைகளை செய்யும் பொருட்டு ஒரு கலப்பையை வடிவமைத்துள்ளார்.

முதலில் இந்த கலப்பையை டிராக்டரில் இணைத்து வரிசைக்கு வரிசை 8 அடி இடைவெளியில் உழுது கொண்டே செல்கிறார் . பின்பு உழுத வரிசையில் தண்ணீர் பாய்ச்சுகிறார். அதற்கு பிறகு 4 அடி இடைவெளியில் வாழைக் கன்றை எடுத்து அழுத்தினால் போதுமானது இந்த வரிசைக்கு வரிசை 8 அடி இடைவெளியில் தக்காளி, மிளகாய் போன்ற பயிர்களையும் ஊடு பயிராக சாகுபடி செய்யலாம்.

**சிறப்பு அம்சங்கள்**

வாழைக் கன்று நடவு செய்ய ஆட்கள் கொண்டு குழி எடுக்க தேவையில்லை. தண்ணீர் பாய்ச்ச ஆட்கள்

கொண்டு தனியாக வாய்க்கால் தோண்ட தேவையில்லை. இந்த முறையில் நடவு செய்த வாழைக்கன்று காற்றினால் சாயும் வாய்ப்பும் குறைவு. வாழைக்கன்று நடவு செய்ய ஒரு ஏக்கருக்கு ரூ. 3,000 செலவாகிறது. ஆனால் வேலை ஆட்கள் மூலம் குழி எடுத்து , வாய்க்கால் தோண்டி நடும் போது ஒரு ஏக்கருக்கு ரூ. 6,000 – 6,200 செலவாகிறது.

**3. பவர் ஸ்பிரேயரின் கைப்பிடியில் கட்டும் "டி" போன்ற அமைப்பு**



கரும்பு , வாழை , மா போன்ற பயிர்களுக்கு பவர் ஸ்பிரேயரை பயன்படுத்தி மருந்து அடிக்கும் போது மருந்து, பயிரின் உயரப் பகுதியில் மருந்து படுவதற்காக கைப்பிடியின் நாசில் அளவை குறைத்து மருந்தை ஊசி போல பாய்ச்சி அடிப்பார். அந்த சமயத்தில் மருந்தின் சீறி பாயும் அழுத்தத்தில் பயிரின் பூ, பிஞ்சு சிறிது கொட்டுவதை உணர்ந்தார். இதற்கு தீர்வு காணும் பொருட்டு , மருந்து ஸ்பிரேயரின் கைப்பிடி பகுதியில் இருந்து அகலமாக பூ போன்று வெளியேறினால் பயிரின் பூ , பிஞ்சு கொட்டுவதையும், மருந்து அடிக்கும் வேகத்தையும் அதிகரிக்கலாம் என்பதை உணர்ந்தார். எனவே கைப்பிடியில் அதிக உயரத்திற்கு தூக்கி பிடித்தால் பயிரின் அதிக பட்ச உயரத்தையும் பூ , பிஞ்சு உதிராமலும் மருந்து அடிக்கலாம். இவர் 3 அடி உயரம் உள்ள "டி" வடிவமுள்ள இரும்பு பட்டாவை (லேசான எடையுள்ள தகட்டினால் ஆன ) வடிவமைத்து உள்ளார். பவர் ஸ்பிரேயரின் கைப்பிடியை இந்த "டி" வடிவமுள்ள இரும்பு ஆங்கிளின் , படுக்கை வசமுள்ள பகுதியில் வைத்து கட்டியுள்ளார். பயிருக்கு மருந்து அடிக்கும் சமயத்தில் இரும்பு ஆங்கிளின் அடிப்பகுதியை கையால் பிடித்து மருந்து அடிக்கும் சமயத்தில் இரும்பு ஆங்கிளின் அடிப்பகுதியை கையால் பிடித்து மருந்து தெளிக்கும் போது, மருந்து பயிரின் அதிக பட்ச உயரத்திற்கும் சென்று, சேருகிறது. இந்த முறையில் மருந்து நாசிலில் இருந்த "பூ" போன்று அகலமாக வெளியேறுவதால் பூ , பிஞ்சு உதிராமலும் இருக்கிறது.

விவசாயியின் முகவரி
திரு.டி. தேவராஜன்
மாதம்பட்டி, தண்டுக்காரன்பட்டி அஞ்சல்
பாலக்கோடு தாலுகா , தருமபுரி மாவட்டம்
மொபைல் : 9842724376

## விஸ்வநாத ரெட்டியின் கால்நடை மூலிகை வைத்தியம்

டாக்டர் விஸ்வநாத ரெட்டி பெங்களூர் கால்நடை மருத்துவக் கல்லூரியில் பணியாற்றி ஓய்வு பெற்ற பேராசிரியர். இவர் தற்சமயம் கால்நடை மூலிகை வைத்தியத்தை சோதித்து எழுதி வருகிறார். இவர் திருப்பதியில் நடைபெற்ற "வந்தே கோமாதரம்" என்ற பசு பாதுகாப்பு மாநாட்டில் தன்னுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.

ஒவ்வொரு கால்நடை ஆராய்ச்சி நிறுவனமும் ஒரு பசு பாதுகாப்பு மையம்தான். சில தொண்டு நிறுவனங்களும் பசுபாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளன. மொத்த கால் நடைகளில் நித்தமும் வைத்தியம் செய்யப்படும் மாடுகளின் எண்ணிக்கை 2 சதவிகிதத்திற்குள் தான் . மாடுகளுக்கு நல்ல தீவனம் , சத்துணவு குடற்புழு நீக்கம் கொடுத்தல் , தடுப்பூசி போடுதல் பேன் உண்ணிகள் அகற்றம், முளைகட்டிய காணப்பயறு கொடுத்தல் (முளைகட்டிய பயிரில் செலினியம் என்ற புற்றுநோய் தடுப்பு காரணியும் , வைட்டமின் "இ" யும் உள்ளது ) போன்ற பராமரிப்பு முறைகளை கடைபிடித்து வந்தாலே மாடுகளின் நோய் எதிர்ப்புத் தன்மையை கூட்டலாம்.

## புற ஒட்டுண்ணிகளுக்கு வைத்தியம்

என்னுடைய கணிப்பில் ஸ்டைலோ (Styloxanthes gynensis ) தீவனப்பயிரின் சாறு ஒட்டுண்ணி புழுக்களை கொல்லும் சக்தி வாய்ந்ததாக உள்ளது. புற ஒட்டுண்ணிகள் காணப்படும் இடங்களில் வாரத்திற்கு ஒரு முறை வெள்ளையடித்தல் (சுண்ணாம்பு பூசுதல்) சிறந்த உத்தியாகும். சீத்தாப்பழ விதை, இலை சாறு கொண்டு உடம்பில் தேய்த்துவிட வேண்டும்.

மாடுகளை நித்தமும் (தென்னை நார்கயிறு) கொண்டு உடம்பில் அழுத்தி மயிர்கட்டுவாக்கில் தேய்த்துவிட உண்ணிகள் உதிர்ந்துவிடும். ஒரு லிட்டர் வெதுவெதுப்பான நீரில் 15 மி.லி வேப்பெண்ணெய் கலந்து மேய்ச்சலுக்கு செல்லும் முன் உடம்பில் தேய்த்து விட கொசுக்கள் மேய்ச்சலின் போது கடித்தலை தவிர்க்கலாம்.

**காணை நோய் வரும் முன் காப்பு**

கருவாட்டு தூளை நீரில் கலந்து மாடு உள்ள கொட்டத்தில் அமாவாசை, பவுர்ணமி நாட்களில் தெளித்துவர வேண்டும். மாற்றாக பன்றி நெய் ஒரு மண் பானையில் இட்டு துணி வைத்து தொழுவத்தில் மூடி தொங்கவிட வேண்டும். இதில் 3 மாதங்களுக்கு ஒரு தடவை நெய் மாற்ற வேண்டும்.

இம்முறையில் நோய் தாக்கினாலும் உடனே குணமாகும். ஹோமியோ முறையில் ‘‘போராக்ஸ்’’ (போராக்ஸ் – 200) 20 மாத்திரை களை 1 நாளைக்கு 3 வேளை வீதம் ஒரு வாரத்திற்கு கொடுக்க வேண்டும். இம்மருந்தை தடுப்பூசி போடும் வரை கொடுத்து வரலாம். இந்த வைத்தியம் செய்யும் சமயம் நோய் வந்தால் தடுக்க இயலாது. ஆனால் குறைந்த வீரியத்துடன் நோய் காணப்பட்டு விரைவில் குணமாகும்.

**காணை நோய் வந்தபின் வைத்தியம்**

மாட்டு வாயை நன்றாக நீர்விட்டு கழுவி 4 வாழைப்பழங்களை நல்லெண்ணெய் அல்லது பன்றி நெய்யில் தடவி 1 நாளைக்கு 3 அல்லது 4 தடவைகள் அளிக்க வேண்டும்.

ஹோமியோ முறையில் மாட்டு வாய் பகுதியை க்யூ. செம்பெர்லியம் (Q Semberlium) 1 பாகத்துடன் 9 பாகம் நீர் விட்டு கழுவிவிட வேண்டும். மெர்க் சால் (Merck sol. 30 ) ரஸ்டாக் (Rhustox 30) போராக்ஸ் (Borax - 30 ) , ஜின்கம் மெட்டாலிகம் (Zincum metallicum ) மற்றும் மதர்டிஞ்சர் 10 சொட்டு 10 மி.லி நீரில் விட்டு 1 நாளைக்கு 3–4 தடவைகள் உள்ளே கொடுக்க விரைவில் குணமாகும்.

**நாட்டு வைத்தியம் :**

எள் 50 கிராம் வறுத்து வெல்லம் 300 கிராம், வெந்தயம் 50 கிராம் (இரவில் ஊற வைத்தது) சேர்த்து இடித்து உருண்டை பிடித்து 10 நாட்கள் கொடுக்க வேண்டும். பன்றி குடலை சமைத்து 15 நாள் இடைவெளியில் 2 முறை கொடுக்கலாம்.

**காய்ச்சலுக்கு**

2 அங்கு நீல கண்வலிக்கிழங்கு வேர் / கிழங்கு எடுத்து தூள் செய்து வெள்ளாட்டுப் பாலில் கலந்து கொடுக்க வேண்டும். ஹோமியோ முறையில் மெர்க்சால் 30 (Merksol. 30) ரஸ்டாக்ஸ் 30 (Rhustox 30) அகோஸ்டாக்ஸ் 30 (Acostox 30) , ஒவ்வொன்றும் 3 சொட்டு எடுத்து 5 மி,லி நீரில் கலந்து 1 நாளைக்கு 3 தடவை கொடுக்க வேண்டும்.

**பால்காம்பு அழற்சிக்கு** (Mammilitis)

ஊமத்தை இலைச்சாறு 10 மி.லி எடுத்து இத்துடன் மைதா மாவை 5 கிராம் அளவு கலந்து காம்புப் பகுதியில் தடவி வர வேண்டும். ஹோமியோ முறையில் மெர்க்சால் 30, ஏஸ்டெக்ஸ் 30, க்யூ எகிநேசியா (Q Echinaesia ) ஒவ்வொன்றும் 1 சொட்டு எடுத்து 5 மி.லி நீரில் கலந்து 1 நாளைக்கு 3 தடவை வீதம் 5 நாட்கள் கொடுக்க வேண்டும்.

**கண்ணில் வெள்ளை விழுந்தால் / கண்புரையேறிவிட்டால்**

நந்தியாவட்டம் பூக்களை பறித்து அரைத்து சாறு எடுத்து கண்களில் சொட்டு விட வேண்டும். ஹோமியோ முறையில் பெரேசியா 30 மற்றும் சிம்பைடம் 30 ஒவ்வொன்றும் 10 மாத்திரைகள் எடுத்து 1 நாளைக்கு மும்முறை கொடுத்து வர வேண்டும்.

**கண்ணில் புற்று நோய் வந்தால்**

விராலி (Dodonaea viscosa) இலையை காய வைத்து பொடி செய்து வைத்துக் கொண்டு இத்துடன் எலுமிச்சை பழச்சாறு சில சொட்டு சேர்த்து வடிகட்டிய சாறை கண்ணில் நித்தமும் விட வேண்டும்.

**பால்காம்பில் கட்டிகள் இருந்தால்**

ஒரு ஊசியால் கட்டியின் மீது புகுத்த வேண்டும். பின் நேர்வலம் (Croton tigilium ) இலைச்சாறு தேய்த்துவிட வேண்டும் பால்கறந்தபின் பன்றி நேய் வைத்து தடவி விட வேண்டும். ஹோமியோ முறையில் கால்கரியா கர்ப் (Calcaria carb ) 0.5 மி.லி எடுத்து 5 மி.லி நீரில் கலந்த நித்தமும் 2 வேளை உள்ளே கொடுக்க வேண்டும்.

**வால்நுனி அழுகிக்கொண்டு வந்தால் (Drytail gangrene)**

முட்டையை உடைத்து நல்லெண்ணெய் சம பங்கு கலந்து வால்மீது தடவி வர வேண்டும். ஹோமியோ முறையில் கிராபைட்ஸ் 30 (3.5 மி.லி) கல்கேரியா கார்ப் 30 (0.5 மி.லி) சிலிசியா 30 (0.5 மி.லி) கலந்து ஹோமியோ மாத்திரைகளை இதில் பாடம் செய்து ஒரு

நாளைக்கு 30 மாத்திரைகள் வீதம் 3 வேளையாக குணமாகும் வரை உள்ளே கொடுத்து வர வேண்டும்.

**சீழ் வைத்த கட்டிகளுக்கு**

வேங்கை மரப்பட்டை எடுத்து சுடு நீர் விட்டு அரைத்து கட்டியின் மீது நித்தமும் தடவி வந்தால் பழுத்து உடைந்தவிடும்.

இதற்கு ஹோமியோ முறையில் ஹெப்பர் சல்ப் 6 மற்றும் கலகேரியா சல்ப் 6 ஒவ்வொன்றும் 10 மாத்திரைகள் வீதம் நித்தமும் 3 முறை உள்ளே கொடுக்க வேண்டும். அல்லது பன்றி நெய்யுடன் அயோடெக்ஸ் களிம்பு சேர்த்து பால்கறந்த பின் தடவி வர வேண்டும். இதையே சோடையான காம்புகளுக்கு தடவி வர குணமாகும்.

**மாட்டுக்கு இரத்த பலம் கூட**

மாட்டுக்கு இரத்த சோகை இருந்தால் அல்லது இரத்தம் கூட்ட இரும்புச் சத்து உள்ள தீவனம் கொடுக்க வேண்டும். நித்தமும் கருவேப்பிலை, முருங்கை இலை, பாலாக்கீரை (பருப்பு கீரை) போன்றவற்றை பச்சையாக தின்னக் கொடுக்கலாம். இத்துடன் மாட்டுக்கு வெல்லப்பாகு சாறு கலந்து கொடுக்கலாம். மாட்டுக் கோமியத்தைப் பிடித்து அதில் சூடுபடுத்தப் பட்ட (சிவப்பாக மாறும் வரை) கம்பியை விட்டு சூடு ஆறும் வரை வைத்திருந்து பின் 1 வாரம் நித்தமும் மாட்டுக்கு கொடுத்து வர வேண்டும்.

**பால் அதிகம் கறக்க**

ஊற வைத்த பாசிப்பருப்பு , சுரைக்காய் சேர்த்து அரைத்து வெல்லமும், கோதுமைத் தவிடும் சேர்த்து தர வேண்டும்.

ஹோமியோ முறையில் ஹோமியோ சர்க்கரை வில்லைகளை (20 size sugar pills) எடுத்துக் கொள்ள வேண்டும். இதில் ஆமணக்கு இலைச்சாறு 15 மி.லி. குதிரை மசால் இலைச்சாறு (alfalfa) 10 மி.லி கால் கேரியாகார்ப் 5 மி.லி கால்கேரியா பாஸ் (30) 5 மி.லி இட்டு ஊற விட வேண்டும்.

இத்துடன் லெசித்தின் 3 விட மேலே படியும். பின் இந்த வில்லைகளை ஒரு நாள் விட்டு ஒரு நாள் ஒரு தேக்கரண்டி அளவு உள்ளே கொடுத்து வர வேண்டும். இதனால் பால் அளவு 500 மி.லி யிலிருந்து 3 லிட்டர் வரை ஒரு நாளைக்குக் கூடும்.

**பால் திரண்டு வந்தால்**

பால் காய்ச்சும் சமயம் பால் திரண்டு துகள் துகளாக பிரியம். இது மடிநோயின் ஒரு அறிகுறியாகும். இதற்கு 1 லிட்டர் வெல்லம் கலந்த நீர் எடுத்து இதில் 6–10 தேக்கரண்டி (30 – 50 கிராம்) சோடா உப்பு கலந்து 1 நாளைக்கு 2 வேளையாக 3 நாட்கள் கொடுத்து வர வேண்டும்.

**எந்த விஷக்கடிக்கும்**

பூச்சி, நட்டுவ்வாக்களி , குழவி எதுவும் கொட்டிவிட்டால் துளசி இலையை கையில் வைத்து கசக்கி 2 சிறு உருண்டைகள் செய்து ஒவ்வொரு காதுக்குள்ளும் திணித்துவிட வேண்டும். இதை தினித்துவிடும் முன்பு காதுப்பகுதியை பஞ்சு வைத்து சுத்தம் செய்ய வேண்டும். இதனால் விஷக்கடி வலி விரைவில் குறைந்து வீக்கமும் வற்றிவிடும். ஹோமியோ முறையில் லீடம் பல் (Ledumpal 30 or 200 ) 1–2 சொட்டு எடுத்து 5 மி.லி நீரில் கலந்து 10 நிமிடங்களில் இரு முறை உள்ளே கொடுக்க வேண்டும்.

முகவரி

Dr. Viswanatha Reddy 42. Bairava
Opp. to Vidhya Prakash School
Jakkur Plantations , Yelahanka
Bangalore - 5600600
Ph : 080 - 22724981 , Mob : 09448052640
Email : vnreddy2004@yahoo.co.in

**ஜீவாமிர்த கரைசல்**

“ரிஷி வேளாண்மை” என்ற தத்துவத்தை மஹாராஷ்டிரா , மத்திய பிரதேசத்தைச் சார்ந்த விவசாயிகள் முறைப்படுத்தி வைத்துள்ளனர். இவர்கள் பஞ்சகவ்யா போன்ற திரவத்தில் “கன்னிமண்” இட்டு ஜீவாம்ருதக் கரைசல் தயாரிக்கின்றனர். கன்னி மண் இதுவரை விவசாயம் செய்யப்படாத பகுதியிலிருந்து எடுக்கப்பட்ட மண் .

இந்த மண் எடுக்க பொதுவாக ஆலமரம் பெரியதாக வளர்ந்துள்ள இடத்தின் கீழே உள்ள மண்ணில் நல்ல சத்துக்கும் , நுண்ணுயிரிகளும் இருக்கும். ஜீவாம்ருதம் தயார் செய்து விதை நேர்த்தி செய்தல், நாற்று / கன்றுகளை பதிய குச்சிகள் நனைத்து நடுதல், பயிருக்கு பாயும் வாய்க்காலில் நீரில் கலந்து விடுதல் போன்றவற்றுக்கு பயன்படுத்தலாம்.

தயாரிப்பு முறை : ஒரு ஏக்கருக்கு கலந்துவிட பசு சாணி 10 கிலோ , மாட்டு கோமியம் 5–10 லிட்டர், வெல்லம் , 2 கிலோ அல்லது 4 லிட்டர் கரும்பு சாறு, கன்னிமண் 1 கிலோ , பருப்பு தூள் (ஏதாவது ஒரு பயறு உடைத்து அரைக்கப்பட்டது) 2 கிலோ, நீர் 200 லிட்டர்.

100 லிட்டர் நீரில் முதலில் சாணத்தை கரைத்து கலக்கிவிட வேண்டும். பின் தூள் செய்யப்பட்ட வெல்லம், பருப்பு தூள், நிலத்து கன்னி மண் போன்றவற்றை இட்டு நன்கு கலக்கி விட வேண்டும். ஒரு நாளைக்கு 3 தடவை கலக்கி விட்டு வர வேண்டும். இந்த கலவையை 3 நாட்களில் இருந்து 7 நாட்களுக்குள் உபயோகப்படுத்த வேண்டும்.

இந்த தயாரிப்பு கரைசலை வாய்க்கால் நீரில் கலந்தவிட 1 ஏக்கருக்கு பயன்படுத்தலாம். அல்லது சொட்டுநீர், நிலத்தில் நேரிடையாக தெளித்தல் செய்யலாம்.

முகவரி

ஆர்.கே. பதக் , ஆர்.ஏ. ராம்

தகவல் : திருப்பதி பசுப்பாதுகாப்பு

மாநாட்டு மலல் (Vande Gomatharam National Coinference Souvenir - Tirupathi Devasthanam).

## கால்நடை மூலிகை வைத்திய அனுபவங்கள்

சேவா மூலம் கால்நடைகளுக்கு மூலிகை வைத்திய முறைகள் கடந்த 14 ஆண்டுகளாக தொகுக்கப்பட்டன. பின் பல இளைஞர்களுக்கும், விவசாயிகளுக்கும், பெண்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டன. சில கருத்தரங்களிலும் சேவா பணியாளர்கள் பங்கு பெற்று மூலிகை வைத்திய முறைகள் விவாதிக்கப்பட்டன. சில வைத்திய முறைகளை நாங்களே சோதித்துப் பார்க்கவும் முடிந்தது. இதன் முடிவாக கால்நடை மூலிகை வைத்தியம் என்ற புத்தகத்தையும் வெளியிட்டோம். கால்நடை மூலிகை வைத்திய பயிற்சி சமயம் போஸ்டர்கள் தயார் செய்து வைக்க கீழ்க்கண்ட குறிப்புகளை கொடுத்துள்ளோம். இது விவசாயிகளுக்கும், கால்நடை பராமரிப்போருக்கும், கோசாலா வைத்திருப்போருக்கும் மிகவும் உதவியாக இருக்கும் என நம்புகிறோம்.

**வயிறு உப்பிசம்**

வெற்றிலை 6, மிளகு 10, ஓமம் 10 கிராம் , சுக்கு 10 கிராம், உப்பு 50 கிராம் சேர்த்து வெது வெதுப்பான சுடு நீரில் கலந்து தரவேண்டும். (அல்லது) பிரண்டை நுனி தண்டு 2கைப்பிடி , முடக்கத்தான் 2 கைப்பிடி , சுக்கு மிளகு, திப்பிலி , சீரகம் , இந்துப்பு , ஓமம் பெருங்காயம் ஒவ்வொன்றும் 10 கிராம் அளவு எடுத்து அரைத்து சுடுநீரில் கலந்து தரவேண்டும்.

**கழிச்சல்**

வாழைப்பூ 20 கிராம் , அத்திக்காய் 1/4 கிலோ தின்னக் கொடுக்கலாம். (அல்லது) பழம்பாசி தழை 100 கிராம் எடுத்து வெந்தயம் 50 கிராம், சீரகம் 50 கிராம் சேர்த்து அரைத்து நீரில் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும். அல்லது ஆவாரம் பூ 100 கிராம் , கொய்யா இலை 100 கிராம் , மாதுளம் பிஞ்சு / பழம் 50 கிராம் , ஓமம் 50 கிராம் சேர்த்து இடித்து பின் நீரில் கலந்து உள்ளே தர வேண்டும். அல்லது மாம்பழ சீசனில் மாம் பருப்பு 50 கிராம் அதிமதுரம் 50 கிராம் சேர்த்து அரைத்து உள்ளே தரவேண்டும். அல்லது தென்னம் பாளை அரிசி 100 கிராம் , சோற்றுக்கற்றாழைசாறு 100 கிராம், வெந்தயம் 50 கிராம் சேர்த்து அரைத்து உள்ளே தர வேண்டும்.

**குடற் புழு நீக்கம்**

சிறியாநங்கை இலை 2 கைப்பிடி அரைத்து நீர் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும். சோற்றுக்கற்றாழை சோறு 100 கிராம் நீரில் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும். நிலாவரை இலை 2 கைப்பிடி அளவு அரைத்து நீர் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும். நிலாவாரை 100 கிராம், குப்பைமேனி 100 கிராம், சிறுகுறிஞ்சான் 100 கிராம், வெல்லம் 100 கிராம் , கொட்டைப் பாக்கு 10 கிராம் அரைத்து உள்ளே தர வேண்டும். மேற்படி ஏதாவது ஒரு முறையை நித்தம் ஒரு வேளை 3 நாட்கள் கொடுத்து வர வேண்டும்.

**காயம், புண் , கால்காணைக்கு**

நிலக்கடம்பு (தரைப்புகையிலை) 100 கிராம், மஞ்சள் 50 கிராம், பச்சைக் கற்பூரம் 50 கிராம் , கற்பூரவல்லி இலை 50 கிராம் சேர்த்து அரைத்து புண் மீது தடவி வர வேண்டும். சோற்றுக்கற்றாழை சோறு 50 கிராம், மஞ்சள் , 10 கிராம் சேர்த்து குழப்பி புண் மீது தடவி வர வேண்டும்.

**சினைபிடிக்காமைக்கு**

சினைபிடிக்காமைக்கு முதலில் கர்ப்பப்பையிலுள்ள கிருமிகளை சுத்தம் செய்ய வேண்டும். இதற்கு சிறியாநங்கை இலை 50 கிராம் அரைத்து 3 நாள் தர வேண்டும். அல்லது சோற்றுக்கற்றாழை மடல் ஒரு நாளைக்கு 1 மடல் வீதம் 3 நாட்கள் தர வேண்டும். பின்னர் கர்ப்பப்பையின் வளர்ச்சி கூட்ட முளைகட்டிய பயறு ஒரு நாளைக்கு 150 கிராம் வீதம் 20 நாட்கள் கொடுத்து வர வேண்டும். அகத்திகீரையும் ஒரு நாளைக்கு 2 கிலோ வீதம் 20 நாட்கள் கொடுத்து வர

வேண்டும். இதை கொடுத்து வரும் சமயம் ஈத்து மாடுகளுக்கு 10 நாட்களுக்குள் முடை / கொடி போடும். பின் சினைக்கு போட வேண்டும். சினை ஊசி போடும் முன்பு 100 மி,லி வேப்பெண்ணெய் வாய்க்குள் ஊற்ற வேண்டும்.

**மடி நோய்க்கு**

பால்கறவைக்குப் பின்னர் மடியை சுத்தம் செய்து சோற்றுக்கற்றாழை சோறு 50 கிராம் எடுத்து நீர்த்த சுண்ணாம்பு 5 கிராம், மஞ்சள் 10 கிராம் சேர்த்து அரைத்து மடி முழுவதும் காம்புகளிலும் தடவி விட வேண்டும். இதனை குணமாகும் வரை காலை மாலை பால்கறவைக்குப்பின் தடவி வர வேண்டும்.

**மடிக்காம்பில் சலம் வைத்துவிட்டால்**

இதனால் பால்திரண்டு வரும் வேப்பம் ஈர்க்கு எடுத்து பால்காம்பிற்குள் சொருக வேண்டும். 1 நாளைக்கு 2 முறை செய்ய வேண்டும். வேலிப்பருத்தி இலை 2 கைப்பிடி அரைத்து வெளிப்பூச்சாக தடவ வேண்டும். வெளிப்பூச்சு மருந்தாக பேய்பீர்க்கு இலை அல்லது வேப்ப இலையுடன் பீர்க்கு இலையும் சேர்த்து அரைத்த போடலாம்.

எல்லாமடி நோய்க்கும் உள்மருந்தாக தலைச் சுருளி வேர் 10 கிராம், மிளகு 10 தூள் செய்து சுடு நீரில் கலந்து கொடுக்க வேண்டும். இத்துடன் எலுமிச்சம்பழம் 3 எடுத்து நறுக்கி உள்ளே தின்ன கொடுக்க வேண்டும். (இதனால் பால் கெடாமலிக்கும்).

**மசால் உருண்டை தயார் செய்து கொடுத்தல்**

மசால் உருண்டை தயார் செய்யும் முறை நம்வழி வேளாண்மை பருவம் 12 இதழ் 1 (ஏப்ரல் – ஜுன் 2004) பக்கம் 10 – ல் கொடுக்கப்பட்டுள்ளது. இதனை 6 மாதத்திற்கு ஒரு முறை கொடுப்பது வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு உகந்தது மற்றும் காய்ச்சல், காணை நோய்க்கும் வரும் முன் தடுப்பாகவும் போய் வந்தபின் நிவாரணியாகவும் குணப்படுத்தும்.

**விஷக்கடிக்கு**

எந்த விஷக்கடியானாலும் உடனே சிறியாநங்கை, தலைச்சுருளி கொல்லங் கோவைக் கிழங்கு , காப்புக்கட்டுத் தழை, வண்ணான் அவுரி போன்றவற்றில் ஏதாவது ஒரு முலிகையையும் அரைத்து 10 மிளகு உடன் சேர்த்து அரைத்து 1 மணி நேரத்திற்கு ஒருதடவை 10 கிராம் அளவு அரைத்து சுடு நீரில் கலந்து 5 தடவை தரலாம்.

**காளைக்கு விடும் சமயம்**

காளை 1 தடவை விழுந்ததும் நிறுத்தி விட வேண்டும். 1 மாட்டிற்கு 1 தடவை மேல் விழ வேண்டிய அவசியமில்லை. அமாவாசை நேரங்களில் இலேசான இரை எடுப்பதால் கர்பப்பை விரிந்து இருக்கும். இதனால் விந்து எளிதில் உள்ளே செல்லும். வெளியேறிவிடாது.

**எருக்கட்டு / மலச்சிக்கல்**

கம்மந்தட்டை (கம்பு தட்டை ) 10 கிலோ தின்னக்கொடுக்கலாம். வீலி இலை 1 கைப்பிடி அரைத்து நீரில் கலந்து உள்ளே தர வேண்டும்.

கடலை எண்ணெய் 1/2 லிட்டர் எடுத்து உள்ளே ஊற்ற வேண்டும்.

1/2 கிலோ புளியை 3 லிட்டர் நீரில் பானாக் காரமாகக் கொடுக்க வேண்டும் .

தொகுப்பு: இராஜமாணிக்கம்
சுபாநந்தன் , விவேகானந்தன்
சேவா , மதுரை

## ஆஸ்திரிய நாட்டு விவசாயிகளின் அனுபவங்கள்

உலகமெங்கும் வேளாண்மையில் முன்னேற்றம் காண எண்ணம் உள்ள விவசாயிகள் பாரம்பரிய உத்திகளையும் மற்றும் தங்கள் அனுபவங்கள் வாயிலாகக் கிடைத்த உண்மைகளையும் இணைத்து திறம்பட செயல்பட்டு வருகின்றனர். இன்று வேளாண்மையில் ஆராய்ச்சியில் ஈடுபட்டு உள்ள விஞ்ஞானிகள் பாரம்பரிய உத்திகளை விஞ்ஞான முறையில் சோதித்துப் பார்க்கும் ஆராய்ச்சி குறைவாகவே உள்ளது. ஆஸ்திரிய நாட்டில் சில விவசாயிகளால் கடைபிடிக்கப்படும் உத்திகள் பின்வருமாறு :

**வளமான மண்மூலம் வளமான பயிர்**

ஆஸ்திரிய நாட்டு விவசாயிகள் மண்ணை வளப்படுத்துவதற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர். வளமான மண் இருந்தால் தான் வளமான பயிர் வளரும். மண்ணை சரியாக கவனிக்காது பயிரை கவனிக்கும் முறையானது அவ்வளவு வெற்றி கரமாக இராது. ஆஸ்திரியா நாட்டில் இரண்டாம் உலகப்போருக்குப் பின் அதிக உரம், மருந்து தீவிர வேளாண்மை சாகுபடி முறை போன்றவற்றினால் பின்விளைவுகள் அதிகமாகி நிலம் மாசுபட்டது. பயிர் விளைச்சல் குறைந்தது : பால்

உற்பத்தி குறைந்தது ; மனித ஆரோக்கியமும் பாதித்தது. இச்சமயத்தில் ''ருடால்பு ஸ்டெயினர்'' என்ற நிபுணர் உயிர்சக்தி வேளாண்மை முறையை கொண்டு வந்தார். இது பின் உலக மெங்கும் பிரபலமானது. உயிர்சக்தி வேளாண்மை முறைகள்/ காலண்டர் ஏற்கனவே நம்வழி வேளாண்மையில் கொடுக்கப்பட்டுள்ளன. (பருவம் 15 இதழ் 3) (அக்டோபர் – டிசம்பர் 2006). ஆஸ்திரியாவில் முக்கியமான இயற்கை விவசாய முனனோடிகளில் ஹெல்கா வேக்னர் என்ற பெண்மணியும் ஒருவர். இவர் மண்ணை வளமாக்குவதிலும் மற்றும் ஒவ்வொரு விவசாயியும் அவருடைய விதை தேவையை அவர்களே உற்பத்தி செய்து உபயோகிக்க வேண்டும் என்ற விதியை நாட்டிலே பரப்பினார். ஒட்டு ரக விதைகளை வெளியே வாங்கி விதைப்பதை இவர் ஏற்றுக் கொள்ள வில்லை.

**நுகர்வோருக்கு வேளாண்மை பண்டங்களைக் கொடுக்காமல் வெள்ளாமையை கொடுத்தல்**

விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களை முன்பு இடைத்தரகர்கள் மூலம் கொடுத்து விற்றுவந்தனர். பின்னர் உழவர் சந்தை போன்று விவசாயிகளே நேரிடையாக விவசாயப் பொருட்களை நுகர்வோருக்கு விற்கும் முறையும் அனைவருக்கும் தெரிந்த ஒன்று. ஆனால் ஆஸ்திரிய நாட்டில் விளை பொருட்களை நுகர்வோருக்குக் கொடுக்காமல் வெள்ளாமை விளைந்த நிலத்தை அல்லது நிலத்தின் சிறுபாத்திகளை நுகர்வோருக்கு மொத்தமாக ஒப்பந்தம் பேசி கொடுத்து விடுகின்றனர். இதன்படி நுகர்வோர் இந்த வெள்ளாமையை அறுவடை செய்து எடுத்துக் கொள்ளலாம். தண்ணீர் பாய்ச்சுவது, களையெடுப்பது, அறுவடை செய்வது போன்ற அனைத்து செலவுகளையும் நுகர்வோரே ஏற்றுக் கொள்ள வேண்டும். விவசாயி பயிர் அறுவடைக்கு வரும் வரை எல்லா விதமான விவசாய வேலைகளையும் பார்த்துவிட்டு நிலத்தை அறுவடைக்கு நுகர்வோரிடம் ஒப்படைப்பார். இது போன்ற நிலங்கள் எல்லாம் முற்றிலும் இயற்கை வேளாண்மை முறையில் பயிர் செய்யப்பட்டிருக்கும்.

**கம்போஸ்டை பிரட்டிவிடும் கருவி**

(Compost Turning Machine)

கம்போஸ்ட் விரைவில் மட்க காற்றோட்டம் அவசியம். இதற்காக அவ்வப்போது கம்போஸ்ட் குப்பையை பிரட்டிவிட வேண்டும். இந்த வேலைகளை செய்வதற்கு ஏற்கனவே கம்போஸ்ட் பிரட்டும் இயந்திரம் உள்ளது. ஆனால் இதற்கு முதலீடு ஜாஸ்தி ஆகும். இதற்கு மாற்று முறையாக விவசாயிக்கு சிக்கனமான முறையில் செயல்படும் எளிய கம்போஸ்ட் பிரட்டும் கருவியை பல இயற்கை வேளாண்மை விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர். அந்தந்த விவசாயிக்கு ஏற்றாற் போல் பிரட்டும் வேகம், கம்போஸ்ட் குப்பையின் கொள்ளளவு, குப்பையை அள்ளி கொண்டு செல்லும் அளவு போன்றவற்றை நிர்ணயித்து வடிவமைத்துக் கொள்கின்றார்கள். இரும்பில் வெல்டிங் செய்த அமைப்பில் இரண்டு இரும்பு ஸ்பைரல் (spiral) ரோலர்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் குப்பை பிரட்டப்படுகின்றது. இதன் மூலம் குப்பை பிரட்டப்படுகின்றது. இந்த அமைப்பு வண்டியின் / டிராக்டரில் டிரைலரில் இணைக்கப்பட்டுள்ளது. டிரைலரில் பொருத்தப்பட்டுள்ள கான்கிரீட் அமைப்பு இந்த கருவியை நிதானமாக இயக்கச் செய்கிறது. டிராக்டரின் ''பிடிஒ'' ஷாப்ட் மூலமாக கம்போஸ்ட் பிரட்டும் கருவி இயக்கப்படுகிறது.

Address :
F.Leitgeb, R.Ninio
S.Kummer , C.R. Vogl , Austria
தேயீன 18 (2 ) ஏப்ரல் – ஜுன் 2007

**பயிரில் புதுரகம் உற்பத்தி செய்ய விவசாயிகளுக்குப் பயிற்சி**

இந்தோனேசியாவில் விவசாயிகளை வைத்து பாரம்பரிய ரகங்களைப் பாதுகாத்தல், நெல்லில் புதுரகம் உற்பத்தி செய்ய விவசாயிகளுக்கு மகரந்தச் சேர்க்கை ஏற்படுத்தவும் எந்தெந்த குணமுள்ள பயிர் ரகத்தை உற்பத்தி செய்ய வேண்டுமோ அந்தந்த குணம் கொண்ட ரகங்களை வைத்து இனப்பெருக்கம் செய்யும் முறையில் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. இதனால் விவசாயிகளே 10 வெள்ளாமையில் ஒரு புது ரகத்தை கொண்டு வரும் நிபுணத்துவத்தை பெற்றுள்ளனர். இந்த முறையை முழுமையாக தெரிந்து கொள்ள The Creativity of Farmers in Indramayu, Indonesia by Yunita T. Winarto and Imam Ardhinanto. Honey Bee volume 18 (2) April - June 2007 . www.sristi.org

## சீனாவில் புதிய கண்டுபிடிப்புகள்

சீனாவில் அடித்தளத்தில் புதிய கண்டுபிடிப்புகளை தொகுக்க இந்தியாவில் உள்ள சிருஷ்டி நிறுவனமும், சீனாவில் உள்ள டினாஜின் பல்கலைக் கழகமும் (Tianjin University of Finance and Economics - TUFE ) இணைந்து கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடு செய்தது. அங்கு நம்வழி வேளாண்மை குழுமத்தின் ஓர் அங்கமாக சீனா கண்டுபிடிப்பாளர்கள் கூட்டமைப்பு ஒன்று உருவாக்கியுள்ளது. சீனாவில் கண்டறியப்பட்ட சில கண்டுபிடிப்புகள் பின் வருமாறு :

**டிரில்லிங் செய்யும் கருவிகள் கழிவுப் பொருட்களை சேகரிக்கும் தட்டு** (Dust holding box for electric driller. )



மின்சாரம் மூலம் இயக்கப்டும் துணை போடும் கருவி அல்லது சுத்தியலில் ஒரு பிளாஸ்டிக் தட்டில் கழிவுத் துகள்கள் கீழே விழுகாமல் சேகரிக்கப்படுகின்றது.

**காந்தவிசை அதிர்ச்சி தாங்கி** (Magnetic suspension shock absorber)

நிலையான காந்தத்தின் விலக்கு விசை தத்துவம் அதிர்ச்சி தாங்கியில் (சாக் அப்சார்பர்) பயன்படுத்தப்பட்டுள்ளது. இரண்டு காந்தங்களின் விலக்கு விசையானது. அதிர்வை ஈடுகட்டி குறைக்கிறது. இந்த காந்தவிலக்கு விதை தத்துவத்தை பயன்படுத்தும் போது ஹைட்ராலிக் அழுத்த எண்ணெய் , ஸ்பிரிங் அல்லது போலட் தேவைப்படாது , மேலும் தொடர்ச்சியாகவும் , சப்தமில்லாமலும் இயங்க கூடியது.

**தானியங்கி சமையல் கேஸ் கட்டுப்படுத்தும் வால்வு**

கேஸ் சிலிண்டரை பயன்படுத்திய பிறகு, பர்னரை ஒழுங்கான முறையில் அடைக்காமல் இருந்தால் , ஆபத்தை விளைவித்து விடும். இதை தவிர்க்க தானியங்கி கேஸ் கட்டுப்படுத்தும் வால்வை சுவிட்ச் அமைப்புடன் இணைக்கலாம். இந்த வால்வில் இயங்கும் நேரத்தையும் தேவைக்கு ஏற்றாற் போல் மாற்றி அமைக்கலாம். இந்த நேர மாறுபாட்டிற்கு ஏற்ப இந்த வால்வானது சுவிட்சை இயக்கி வாயுவை கட்டுப்படுத்துகிறது.

**பூட்டில் மின்னிடும் சாவிதுவார அமைப்பு**

இரவு நேரங்களில் பூட்டின் சாவி துவாத்தில் சாவியை நுழைத்து பூட்டினை திறப்பது சிரமமான செயல். புதுமையான முறையாக புளோரசண்ட் பொருளை பயன்படுத்தி சாவி துவாரத்தை வடிவமைத்து உள்ளதால், இரவு நேரங்களில் பூட்டினை திறக்கவும் எளிதாக உள்ளது.

**கொசுவர்த்தியை குறித்த நேரம் வரை எரிய விடுதல்**



கொசுக்கள் இரவு நேரங்களின் முற்பகுதியில் மட்டும் இருக்கும் சமயத்தில் முழு கொசு வர்த்தி சுருளை பயன்படுத்தலாம். கொசு இல்லாத சமயங்களில் கொசுவர்த்தி தேவையில்லாமல் எரிந்து வீணாகிறது. இதை தடுக்கும் பொருட்டு சிறிய இரும்பு துண்டை கொசுவர்த்தி சுருள் எரிந்து கொண்டு வரும் போது, இரும்புதுண்டின் அருகில் வரும் போது அணைந்து விடுகிறது. இரும்பு துண்டின் இடத்தை மாற்றி வைப்பதன் மூலம் கொசுவர்த்தி சுருள் எரியும் நேரத்தை கூட்டி அல்லது குறைத்து வைக்கலாம்.

**பிற கண்டுபிடிப்புகள்**

பெரிய காற்றடிக்கும் சமயம் குடை மடங்குவதை

தவிர்க்க கயறு வைத்து இறுக்கமாக கட்டிவிடும் அமைப்பு , கடினமான பகுதியில் எழுதும் பேனா, செல்போனில் வீட்டுத் திருட்டை தடுக்கும் எச்சரிக்கும் ஓசை எழுப்புதல் , செருப்பு / பூட்சில் ஈரப்பதத்தை நீக்குதல் போன்ற கண்டுபிடிப்புகளும் கண்டறியப்பட்டுள்ளன. இந்த கண்டுபிடிப்புகளின் முழு விவரத்தை தெரிந்து கொள்ள Innovations Blossom in China , Honey Bee vol 18 (2) April - June 2007. www.wsristi.org.இணையதளத்தில் பார்க்க.

**மாட்டுப்பொங்கல்**

ஒரு கொம்பில் மஞ்சளும் மறு கொம்பில் காவி மண்ணும் வாணம் பூச வேண்டும். நெற்றியிலும் உடம்பிலும் சந்தனம், குங்குமம் வைத்து கழுத்தில் மாலை போட்டு விட வேண்டும். பின் மாட்டுக் கொட்டத்தில் சர்க்கரை பொங்கல் (விறகு வைத்து) தயார் செய்து சூரியனைப் பார்த்து கும்பிட வேண்டும். பெயிண்ட் பூசுவது தவிர்க்க வேண்டும்.

திருமதி. தவிடம்மாள், காக்கிவாடன்பட்டி

## அறிவைத் தேடும் நடை பயணம்

ஈரோடு மாவட்டம் அந்தியூர் வட்டாரம் பர்கூர் பஞ்சாயத்தில் உள்ள தாமரைக்கரையிலிருந்து தாழைக்கரை, கோவில்நத்தம், கொங்காடை, செங்குளம், குட்டையூர் , பிஜலெட்டி ஊர்வரை பாதயாத்திரை ஒன்று 26.12.2007 முதல் 31.12.2007 வரை ''சேவா'' நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது. இதில் சேவா பணியாளர்கள் , நம்வழி வேளாண்மை கூட்டமைப்பு தன்னார்வலர்கள் / கண்டுபிடிப்பாளர்கள் கலந்து கொண்டனர். இந்த நடை பயணத்தின் போது கீழ்க்கண்ட உத்திகள் தொகுக்கப்பட்டன.

**அவரைச் செடிக்கு புகைமூட்டம் செய்து பூச்சிக்கட்டுப்பாடு :**

பர்கூர் பஞ்சாயத்து கிராமங்களில் மானாவாரியாக ராகியும் அவரைக் கொட்டையும் பயிர் செய்கிறார்கள். ராகிபயிர் அறுவடை செய்தபின் அவரை செடிகள் வளர்ந்து வரும். அவரையில் பூ எடுத்து பிஞ்சு வரும் சமயம் புழுக்கள் உண்டாகும். இந்த காய்ப்புழுவை கட்டுப்படுத்த சேங்கொட்டை மரத்தின் (கியராமரம்) இலையெடுத்து 2 அல்லது 3 சேரங்கொட்டை விதையுடன் எரு போட்டு தீ மூட்டம் செய்வார்கள். இதனை அமாவாசை அன்று நிலத்தில் 2 இடங்களில் செய்தால் புகைவாசனைக்கு புழுக்கள் கட்டுப்படும்.

**அவரை கொட்டையை பாதுகாக்க:**

இராகி விதைக்குள் கலந்து சேமித்து வைக்க பூச்சி தாக்குதலிலிருந்து அவரை விதைகள் பாதுகாக்கப்படும் .

**மலைராகி**

அழ கருப்பாக இருக்கும். ஒரு மூட்டைக்கு 100 கிலோ இருக்கும். இரசாயன உரம் போடப்படும் நவீன ராகி 80 கிலோ வரைதான் இருக்கம்.

**அவரை விதையை பாதுகாக்க :**

கினாங்கு புல்லில் கூடையாக பின்னி அவரை விதைகளை அதில் போட்டு ராகிப் பொட்டு, துளசி தழை, புங்கங்கொழுந்து போட்டு மூட வேண்டும். பின்னர் சாமைப்புல்லை சுற்றி வைத்து கட்ட வேண்டும். பின்னர் செம்மண் சாந்து பூசி வைத்துவிட வேண்டும். இதில் அவரைவிதை 20–25 கிலோ வரை சேமிக்கலாம். 2 வருடம் வரை இதில் விதைகள் பாதுகாக்கப்படும்.

**ஆலுகடுப்பு :**

மலை ராகி மாவை நீரில் பிசைந்து சிறு சிறு உருண்டை பிடிக்க வேண்டும் (நெல்லிக்காய் அளவு ) . இதனை கொதிக்கிற பாலில் இட்டால் கட்டியான உருண்டைகள் கிடைக்கும். இது கொலுக்கட்டை மாதிரி இருக்கும். இதனை உடனே சாப்பிடலாம்.

**சணப்பு விதைத்து வருமானம் எடுத்தல்**

ராகி / கேழ்வரகு பயிரில் அவரை சாலில் விதைக்கப்படுகிறது. கடந்த 7–8 வருடங்களாக இத்துடன் காட்டு சணப்பும் பொலி ஓரங்களிலும் அல்லது ஊடு பயிராகவும் விதைக்கப்படுகிறது.

காட்டு சணப்பு கிலுகிலுப்பை செடி போன்று சுமார் 5 அடி உயரம் வரை பயிராக வளர்கிறது. சுமார் 2 கைப்பிடி அளவு விதை எடுத்து இராகிவிதையுடன் சேர்த்து கலந்தும் விதைக்கின்றனர். ஏக்கருக்கு 200 – 300 கிலோ வரை சணப்பு விதை அறுவடை செய்து விற்பனை செய்து வருகின்றனர். இந்த சணப்பு விதை கிலோவிற்கு ரூ. 20 ஆக விற்பனை செய்கின்றனர். இந்த விதைகளை கர்நாடக பகுதியில் நெல்விதைப்பிற்கு முன் பசுந்தாள் உரப்பயிராக விதைக்க வாங்கிச் செல்கின்றனர்.

**மாட்டு கொளம்பு அளவுக்கு மேல் வளர்ந்திருந்தால்**

பூவரசம் பட்டை , முருங்கைபட்டை இடித்து மாட்டுப் பாலில் (500 மி.லி ) கலந்து பின் நெய் 100 கிராம் வெல்லம் 100 கிராம் சேர்த்து கலந்து 3 ஞாயிறு ஊற்ற

வேண்டும்.

முகவரி
திரு. பொன்னையன்
த/பெ. பொன்னழகிய கவுண்டர்
சின்னசெங்குளம்

## நம்வழி வேளாண்மைக்கு சந்தா விவரம்;

| | tUl re;jh &gha; | MAs;re;jh &gha; |
|---|---|---|
| நூலகங்கள் / நிறுவனங்கள் / கல்லூரிகள் / கம்பெனிகள் | 150 | 1500 |
| சமூக சேவா மையங்கள்———————————— | 125 | 1250 |
| விவசாயிகள் / தனிநபர்கள் ———————————— | 100 | 1000 |
| தனிப்பிரதி———————————————————— | 25 | ——— |
| 16 வருட பிரதிகளின் தொகுப்பு (பைண்டிங் செய்தது) | 1000 | ——— |

சந்தா தொகை மணியாடர் அல்லது பாங்க் டிராப் மூலம் **சேவா,**
மதுரை என்ற பெயரில் எடுத்துக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

நம்வழி வேளாண்மை,
45,டி. பி.எம்.நகர். விராட்டிபத்து
மதுரை 625 016

Printed by A. Palaniappan at
Vivekananda Press
G-4, Industrial Estate, Madurai - 7

Published and Edited by
P. Vivekanandan on behalf of
Tamil Nadu Iyarkai Velanmai
Arakattalai
45. T.P.M. Nagar
Virattipathu
Madurai - 625 016
(0452) 2380 082 / 2380943
Email : vivekseva@gmail,com

நூல் அஞ்சல்

பெறுநர்

------------------------------------

------------------------------------

------------------------------------

------------------------------------